# கல்வெட்டு

*Kalvettu*

திருவள்ளுவர் ஆண்டு 2046 தைத் திங்கள்



குடி-திணை-பெருந்திணை
பூலாங்குறிச்சி கல்வெட்டு, கி.பி. நான்காம் நூற்றாண்டு

கல்வெட்டு - காலாண்டிதழ் - 96 ( சனவரி 2015 ) விலை: ரூ. 10.00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

## உள்ளே

1. குடி-திணை - பெருந்திணை ... 1
நா. கணேசன்

2. சிவபுரம் ராஜராஜஈசுவரமுடைய மகாதேவர் கோயில் ... 13
கி. ஸ்ரீதரன்

3. ஆவுடையார் கோயில் பாடல் கல்வெட்டுகள் ... 20
சொ. சந்திரவாணன்
கோ. முத்துசாமி

4. The Migration of Chezhuhai Vellalas - A Study ... 25
D. Gopalan

5. வரலாற்றின் அடிப்படை ஆவணம் ஓலைச்சுவடிகள் ... 30
நா. கணேசன்

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை ஆணையர் முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப., அவர்கள் சார்பாக மதுரை மண்டல உதவி இயக்குநர் திரு. **நா. கணேசன்** அவர்களால் வெளியிடப்பட்டது.
இணையதளம்: www.tnarch.gov.in
மின் அஞ்சல் : tnarch@tn.nic.in
archcommissioner@gmail.com

முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப.,
ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை-600 008.

# பதிப்புரை

வரலாற்று அறிஞர்களும், தொல்லியல் வல்லுநர்களும் ஆதாரங்களுடன் எழுதுகின்ற ஆய்வுக்கட்டுரைகள் இத்துறையின் காலாண்டிதழ்களில் தொடர்ந்து வெளியிடுவதின் வாயிலாக பண்டைய தமிழகத்தின் அரசியல், நிர்வாகம், சமுதாயம், பொருளாதாரம், வாணிபம் மற்றும் சமயம் பற்றி அனைவரும் அறிந்து கொள்வதற்கு பெரிதும் துணையாக உள்ளன. மேலும், இக்காலாண்டிதழில் கல்வெட்டுகள், அகழாய்வுத் தொல்பொருட்கள், ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், காசுகள் போன்ற முதன்மைத் தரவுகளைக் கொண்டு எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடான 'கல்வெட்டு' எனும் காலாண்டிதழில் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. தற்போது வெளிவரும் கல்வெட்டு காலாண்டிதழ்-96-இல் ஐந்து கட்டுரைகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது. இவற்றில் "குடிதிணை-பெருந்திணை" என்ற கட்டுரையின் மூலம் குடிகளின் தோற்றம், நிர்வாக முறை, திணை என்ற சொல்லின் உயர்வு, பெருந்திணை என்ற சொல்லுக்கு அரசாங்க அதிகாரிகளோடு உள்ள தொடர்பு போன்றவைக் கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகளோடு விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள "சிவபுரம் ராஜராஜ ஈசுவரமுடைய மகாதேவர் கோயில்" அரசாணை நிலை எண் 1109, கல்வித்துறை, நாள் 17.6.1978-ன்படி தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் உள்ள

கல்வெட்டுகள் கூறும் கொடைகளைப் பற்றிய செய்தியும், சோழர் காலத்தில் 'உரோகடம்' என அழைக்கப்பட்ட இவ்வூர் பாண்டியர் காலத்தில் 'ஊரோடகம்' என மாறி அழைக்கப்பட்ட செய்தியும் கவனிக்கத்தக்கவை.

"ஆவுடையார் கோயில் பாடல் கல்வெட்டுகள்" எனும் இக்கட்டுரையில், திருப்பெருந்துறை என்று அழைக்கப்பட்ட ஆவுடையார் கோயிலின் அமைப்பு பற்றியும் இங்கு இடம்பெற்றுள்ள பாடல் கல்வெட்டுகளைப் பற்றியும் பல அரிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"The Migration of Chezhuhai Vellalas - A Study" என்பது செழுகை வெள்ளாளர் குடியைப்பற்றி கல்வெட்டு ஆதாரங்களோடு விளக்குவதாக அமைந்துள்ளது.

"வரலாற்றின் அடிப்படை ஆவணம் ஓலைச்சுவடிகள்" என்ற கட்டுரையின் மூலம், ஓலை ஆவணங்கள்தான் அரசர் முதல் அடித்தட்டு மக்கள் வரை அனைவரின் வாழ்க்கை நிகழ்வுகளை வெளிப்படுத்தும் ஒப்பற்ற ஆவணம் என்பது நிறுவப்படுகிறது.

இவ்விதழினைச் சிறப்புறப் பதிப்பித்துள்ள இத்துறை மண்டல உதவி இயக்குநர் திரு. நா. கணேசன் அவர்களுக்கு என் மனமுவந்த பாராட்டுகள். இக்கல்வெட்டுக் காலாண்டிதழ் பாங்குற வெளிவருவதில் பெரும்பங்காற்றிய அச்சுப்பிரிவினர் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

30/3/14

ஆணையர்

# 1 குடி–திணை – பெருந்திணை

**நா. கணேசன்**
மண்டல உதவி இயக்குநர்
மதுரை

உயிர் வாழ்ந்த மனிதன் தன் இனத்துடன் கூடி வாழ்ந்தான். இத்தகைய இனக்குழு வாழ்க்கையில் ஆண், பெண் இடையே இயற்கையாக ஏற்பட்ட உறவினடிப்படையில் பல மாற்றங்களும் புதிய உறவு முறைகளும் தோன்றின. தாத்தா பாட்டி, தாய், தந்தை, கணவன், மனைவி, மகன், மகள், மருமகன், மருமகள் பேரன், பேத்தி போன்ற உறவுகள் ஏற்பட்டு இரத்த உறவு கொண்ட இவர்கள் ஒரு குடியாக கருதப்பட்டுள்ளனர். பொதுவாக குடி என்பது இரத்த உறவுள்ள கூட்டத்தினரைக் குறிப்பதாகும்.

இக்குடியில் வயதில் மூத்தோன் மற்றவர்களுக்கு உயர்வாகவும் தலைமைப் பண்பு கொண்டவனாகவும் விளங்கினான். அக்குடியிலுள்ள மற்ற அனைவரும் அம்மூத்தோனுக்குக் கீழ்படிந்தவர்களாய் வாழ்ந்துள்ளனர். இதுபோன்ற குடிகளின் தோற்றம் நாட்டின் பல இடங்களிலும் ஒரே தன்மையுடையனவாய் விளங்கின. கிர்னார், பெஷாவர் போன்ற பகுதிகளில் கி.மு. 258–இல் பொறிக்கப்பட்ட அசோக மன்னனது பாறைக்கல்வெட்டுகளில் சோழ, பாண்டிய குடிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதால் குடிகளின் தோற்றம் என்பது அதிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது.

பண்டைய குடிகளின் நிர்வாகம் என்பது அனைத்து மக்களும் கூடிப்பேசி முடிவெடுக்கும் நிர்வாக முறையாக இருந்திருக்க வேண்டும். இது தன்னைத்தானே நிர்வகித்துக் கொள்ளும் பண்டைய கணங்களைப் போன்றதாகும். கணம் என்பது கூட்டம் என்ற பொருளில் பயன்பாட்டில் இருந்துள்ளது. குடிகளின் உழைப்பால் கிடைத்த உணவு உற்பத்தி தேவைக்கு மிஞ்சிய நிலையில் அவற்றை தம் குடிகளின் எதிர்காலத் தேவைக்காக சேமித்த பொழுது கூடுதல் உற்பத்தியையும், அவ்வுற்பத்தியோடு தொடர்புடைய உறவுகளையும் பாதுகாக்கின்ற அல்லது நிர்வகிக்கின்ற கடமையும், பொறுப்பும் அக்குடியில் இருந்த மூத்தோனுக்கு இருந்ததால், அம்மூத்தோன் உயர்வாகவும், சிறப்பாகவும் கருதப்பட்டுள்ளான். இதுபோன்று பல குடிகளிலிருந்து உருவான மூத்தோர்களைக் கொண்ட அமைப்பு அன்றைய சிற்றூர்களை நிர்வகித்தமை வரலாற்றில் காணமுடிகிறது.

சிற்றூர் நிர்வாகத்தில் பங்குபெற்ற இம்மூத்தோர்கள்தான் நாட்டில் அரசு உருவானபின், அரசு நிர்வாகத்தின் ஒரு அங்கமாக விளங்கிய சிற்றூர் நிர்வாகத்தை நடத்திய சபை உறுப்பினர்களாக மாற்றம் பெற்றுள்ளனர். இவர்களே 'திணை' என்று அழைக்கப்பட்டுள்ளனர். இதனைக் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் காணமுடிகிறது. 'என் திணை சிறக்க நீ பிறந்தாய்' என்ற பதிற்றுப்பத்துப்பாடலில், புலவனின் குடி சிறந்து விளங்குவதற்காக மன்னன் பிறவி எடுத்துள்ளதாக பாடுவதிலிருந்து திணை என்ற சொல் குடியிலிருந்து தோன்றிய சொல் என்பதை உறுதி செய்யலாம். குடி என்பது இரத்த உறவுள்ள கூட்டத்தினரையும், திணை என்பது குடிகளில் உயர்ந்து நிற்கும் அல்லது குடிக்குள்ளேயே ஆளும் தன்மைக்கொண்ட அல்லது குடியில் பண்பாலும், அறிவாலும், அனுபவத்தாலும் வயதாலும் உயர்ந்து நின்று அக்குடியை நிர்வகிக்கும் மூத்தோனையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது எனலாம்.

பண்டையத் தமிழ் இலக்கியங்களில் 'திணை' என்ற சொல் ஐந்திணை, புறத்திணை, அகத்திணை, உயர்திணை, அஃறிணை என பலவகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலக்கிய ஆசிரியர்கள் 'திணை' என்ற சொல்லுக்கு 'ஒழுக்கம்' என்று பொருள் கூறுவர். ஆனால் 'திணை' என்ற சொல் வேறு சில பொருள்களையும் கட்டி நிற்பதை கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் காணலாம். 'திணை' என்பது 'திண்' என்ற வேர் சொல் சொல்லிலிருந்து தோன்றியது. அச்சொல்லுக்கு தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, கொடகு ஆகிய மொழிகளில் செறிவு, உறுதி, கூட்டம், நிறைந்த வலிமை, அதிகாரம் சக்தி வாய்ந்த மனிதன் என்று பல பொருள் கொள்ளப்படுகின்றன. இவற்றில் நிறைந்த வலிமை, அதிகாரம் சக்திவாய்ந்த மனிதன் என்ற பொருள்களை நோக்கும்பொழுது குடியில் தோன்றி வலிமையும் அதிகாரமும் உள்ள சக்தி வாய்ந்த மனிதனைக் குறிக்கும் சொல்லாக 'திணை' என்ற சொல் சமூகத்தின் பயன்பாட்டில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. அத்துடன் 'குடி' என்ற சொல்லைவிட 'திணை' என்ற சொல் உயர்வானது என்ற பொருளில் பல இடங்களில் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

*நின்னொடு தொன்று மூத்த உயிரினும் உயிரொடு*
*நின்று மூத்த யாக்கை அன்ன நின்*
*"ஆடுகுடி" மூத்த "விழுத்திணைச்" சிறந்த*
***வாளின் வாழ்நர் தாள் வலம் வாழ்ந்த*** - (புறம்-24)

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகளில் குடி, திணை ஆகிய சொற்கள் பயின்று வருகின்றன. குடி என்பது ஆடுகுடி என்றும், திணை என்பது விழுத்திணை என்றும் பயின்று வந்துள்ளன. ஆடுகுடி என்பது "ஆளும்குடி" என்ற பொருளிலும், விழுத்திணை என்பது "பெருமைமிக்கக்குடி" என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடலில் பெருமை மிகுந்த குடியில் தோன்றியவர்களின் ஆளும் குடிகளாக இருந்துள்ளதை அறியமுடிகின்றது. அதனால்தான் மூவேந்தர் மரபில் வந்தோர் சிலரை சுட்டும்பொழுது விழுத்திணை, தொல்திணை என்று சங்கப்பாடல்கள் சுட்டுகின்றன. திணை என்பதற்கு உரையாசிரியர்கள் நிலம், குடி, குலம், ஒழுக்கம் என்று பொருள் கொண்டுள்ளனர். இங்கு குடி, குலம், ஒழுக்கம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதனால் திணை என்பது ஒரு குடியில் பிறந்து வயது, அறிவு, ஒழுக்கம், பண்பு அனுபவம் ஆகியவற்றில் உயர்ந்து நின்ற மூத்தோனை குறிக்கும் சொல் என்பதை உறுதிப்படுத்தலாம். கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இத்திணைகளின் செயல்பாடு சமூகத்தில் பரவலாக இருந்துள்ளதைக் கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகின்றது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டைக்கருகில் பந்தல்குடி கிராமத்திலுள்ள தீர்த்தங்கரர் சிற்ப பீடத்தின்மீது பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராசராசசோழனின் வட்டெழுத்து கல்வெட்டு இதற்கு சான்றாக உள்ளது.

"ஸ்ரீ இராசராச தேவர்க்கு யாண்டு இருபத்திரண்டாவது
வெண்பு னாட்டு நா-
லூ ரவிசேரி பள்ளிக்கு இவ்வூர் மாறஞ்சடையன் மகன்
சடைய சங்கையன் ம -
கன் சங்கையஞ்சடையன் மகள் சடைய நற்சக்கி(யை)
இந்நாட்டு "வெண்புரை திணை
வழுவிலி மகன் வழுவிலி சாத்தன்" பெற்ற சடைய நற்சக்கி
மகன் சாத்
தம்புகழ் மகன் புகழ்சடையேன் எம்மூத்தப்பன் வழுவிலி
சாத்த
னையும் எம்மூத்தம்மை சடையன் நற்சக்கியையுஞ் சாத்தி
இட்ட கற்திருமேனி"

என்ற அக்கல்வெட்டில் புகழ்சடையன் என்பவன் வெண்புநாட்டு வெண்புரை என்ற ஊரின் திணையாக விளங்கிய தனது பாட்டன் (மூத்தப்பன்) நினைவாக வெண்பு நாட்டு நாலூர் சமணப் பள்ளிக்கு தீர்த்தங்கரர் சிற்பத்தை செய்தளித்ததாகக் கூறப்பட்டுள்ளது. "வழுவிலி" என்பவன் வெண்புரை என்ற ஊரின் திணையாக விளங்கியமையும், அவன் வழிவந்தோர் "வெண்புரை திணை"வழுவிலியை உயர்வாக எண்ணியதையும் அக்கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது. இங்கு வழுவிலி என்பது பெயராகவும் சாத்தன் என்பது குடி பெயராகவும் பொறிக்கப்பட்டுள்ளதை நோக்கும்பொழுது ஒரு குடியில் வயது, ஒழுக்கம், பண்பு, அறிவு, அனுபவம் ஆகியவற்றில் சிறந்த மூத்தோனே அவ்வூரின் திணையாக செயல்பட்டுள்ளதை உறுதிப்படுத்தலாம். அத்துடன் குடியிலிருந்தே திணைகள் உருவானார்கள் என்பதையும், அத்திணைகளை அக்குடிவழி வந்தோர் போற்றி மதித்தார்கள் என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

சங்ககாலத்தில் திணை என்ற சொல்லின் உருவாக்கத்திற்கும், செயல்பாட்டிற்கும் சரியான காரணங்கள் இருந்திருக்க வேண்டும். இனக்குழு சமூக வாழ்க்கையிலிருந்து உடைமை சமூக வாழ்க்கை நிலைக்கு சமூகம் மாறியபொழுது மாற்றத்தின் பயனாய் ஏற்பட்ட தேவையும், அரசுருவாக்கமுமே இதற்கு காரணம் என்றால் மிகையல்ல. சங்ககால சமுதாயம் நிலவுடைமைச் சமுதாயமாக மாறிய சூழ்நிலையில் முந்தைய இனக்குழு சமுதாயத்தின் எச்சங்களும் தொடர்ந்தன. குடிகள் திணைகளைக் கொண்ட சிற்றூர் நிர்வாக அமைப்பு நிலவுடைமைச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து தேவைப்பட்டது. அதன் வெளிப்பாடாகவே சங்க இலக்கியங்களில் குடி, தொல்குடி, முதுகுடி, திணை, தொல்திணை, விழுத்திணை பற்றி சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் அரசின் செயல்பாடுகள் சிற்றூர் நிர்வாகத்தையும் உள்ளடக்கி இருந்தது. ஊர் நிர்வாகத்தில் பங்கு கொண்ட மூத்தோராகிய திணைகள் நாட்டு நிர்வாக அமைப்பிலும் அரசு அதிகாரியாக மாற்றம் பெற்று செயல்பட்டுள்ளதை கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகின்றது.

"அரையன் வீரசோழனுக்குக் குடிநீக்கா தேவதானக் காணிக்கடமையாகச் செய்துக் குடுக்க" என்று செம்பியன் இருக்குவேளானுக்கு ஶ்ரீமுகம் வர இவர் தங்கண்மி "உறத்தூர்த் திணையை இப்பரிசு செய்துகுடுக்க என்று ஏவ இவனும் இப்பரிசு செய்து குடுத்து" என்ற கல்வெட்டில் மன்னனின் ஆணையை ஊர்

மக்களிடையே செயல்படுத்திய பொறுப்புமிக்க அரசு அதிகாரிகளாக திணைகள் செயல்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. "அரையன் வீரசோழனுக்குக் குடிநீக்கா தேவதாநக் காணிக் கடமையாகச் செய்துக் குடுக்க என்று செம்பியன் இருக்குவேளானுக்கு ஸ்ரீமுகம் வர"-என்ற கல்வெட்டுத் தொடரின் மூலம் செம்பியன் இருக்குவேளான் மன்னனின் ஆணையை செயல்படுத்தும் உயர்அலுவலராக செயல்பட்டுள்ளதையும் "செம்பியன் இருக்குவேளான் தங்கன்மி உறத்தூர்த் திணையை இப்பரிசு செய்து குடுக்க என்று ஏவ" என்ற கல்வெட்டுத் தொடரின் மூலம் மன்னன் ஆணையை மக்களிடையே செயல்படுத்தும் செயல் அலுவலராக திணைகள் செயல்பட்டுள்ளதையும் அறியலாம். இக்கல்வெட்டில் "உறத்தூர் திணை" ஆற்றிய செயலினை நோக்கும்பொழுது நாட்டு நிர்வாகத்திலும், அரசு நிர்வாகத்திலும், ஊர் நிர்வாகத்திலும் திணைகளின் பங்களிப்பு சிறப்பாக இருந்துள்ளதை அறிந்து கொள்ளலாம்.

இனக்குழு சமூகத்தில் பல குடிகள் இணைந்து சிற்றூர் என்ற நிலை உருவானபொழுது ஒவ்வொரு குடியிலிருந்தும் உருவாகியிருந்த மூத்தோர்களாகிய திணைகளின் கூட்டு செயல்பாட்டின் மூலம் அக்காலத்திய சிற்றூர் நிருவகிக்கப்பட்டது. சிற்றூரின் இக்கூட்டு நிருவாக அமைப்பில் இருந்த திணைகளே சங்ககாலத்தில் அரசு உருவானபின் ஏற்பட்ட நாட்டு அமைப்பிலிருந்த பெருந்திணைக்கும் மக்களுக்கும் இடையே செயலாற்றிய அதிகாரிகளாக மாற்றம் பெற்றுள்ளனர். மன்னராட்சியில் பரந்துப்பட்ட நாடு மண்டலங்களாகவும், வளநாடுகளாகவும், கூற்றங்களாகவும், நாடுகளாகவும், ஊர்களாகவும், சிற்றூர்களாகவும் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. ஊரின் திணைகளாக விளங்கியவர்கள் தங்களின் சிறந்த செயல்பாட்டால் அடுத்த நிலையிலுள்ள நாடளவில் போற்றப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டுள்ளனர். தூத்துக்குடி மாவட்டம் திருவைக்குண்டம் வட்டம் இருவப்புரம் கிராமத்தில் உள்ள பெரும்படை சாஸ்தாக் கோயில் அருகிலுள்ள செக்கின்மீது

'கூரங்குடி நாட்டு மரமங்கலத்து திணைகள் பேரால்

மிழலூர் அப்பன் வழுது இடுவித்த செக்கு'

என்று பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் மரமங்கலம் என்ற ஊரைச் சேர்ந்த திணைகளின் பணியினையும்,

பண்பினையும் பாராட்டி மிழலூர் என்ற மற்றொரு ஊரைச் சேர்ந்த அப்பன் வழுது என்பவன் மரமங்கலத்து திணைகள் பெயரால் செக்கு செய்தளித்ததாக பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் மூலம் ஊர்த்திணைகள் பல ஊர்மக்களும் மதிக்கத்தக்க மாண்பினைக் கொண்டிருந்தனர் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. இத்தகைய திணைகள்தான் ஊர்த்திணைகளாக இருந்துகொண்டு நாட்டு நிர்வாகத்தில் பங்கு பெற்ற திணைகளாக இருக்கக்கூடும். இரத்த உறவு கொண்ட குடியிலிருந்து வந்த மூத்தோன் தன் குடி சிறப்பால் ஆளும் குடியாகி, குடியின் தொன்மைச் சிறப்பால் தொல்திணையாகி, குடியின் விழுமியப் பெருமையால் விழுத்திணையானான். சிற்றூரை நிர்வகித்த ஊர் ஆட்சிக்குழுவில் பங்குபெற்று பணியாற்றி அரசு உருவானபின் அரசு நிர்வாகத்தில் ஒரு அங்கமாகி செயல்பட்டுள்ளான். இத்தகைய சமூக மாற்றங்கள் சில வரையறைக்குட்பட்டு படிப்படியாக நிகழ்ந்துள்ளன.

தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களிலும் மக்கள் மேற்கொண்ட தொழிலைப் பொறுத்தே சமூகப் பொருளாதார வளர்ச்சியும், மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. மருத நிலத்தில் இத்தகைய மாற்றங்கள் துரிதமாக நடைபெற்றது. பொதுமைப் பண்பு கொண்ட இனக்குழு வாழ்க்கையிலிருந்து உடைமைப் பண்பு கொண்ட நாடும், அரசும் மருத நிலத்தில்தான் முதன் முதலில் தோன்றியது. மருதநிலத்தில்தான் சமூக மாற்றங்களும், நிர்வாக மாற்றங்களும் முறையாக நிகழ்ந்துள்ளன. அத்தகைய மாற்றங்களை இலக்கியங்கள், கல்வெட்டுகள் கொண்டு அறிந்துகொள்ள முடிகிறது.

திணை என்பதின் வளர்ச்சியாகப் பெருந்திணையைக் கூறலாம். பொதுவாக தமிழ் இலக்கியங்களில் பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் என்று தொல்காப்பியம் பெருந்திணைக்கு இலக்கணம் வகுப்பதும் இப்பொருளின் அடிப்படையிலேதான். ஆனால் நிருவாகத்திலும், அரசியலிலும் பயன்படுத்தப்பட்ட பெருந்திணை என்ற சொல் அரசோடும், அரசு அதிகாரத்தோடும் தொடர்புடைய சொல்லாகும். இராஜராஜ பெருந்தச்சன், சுந்தரசோழப் பெருந்திணை, பெருங்கணியன், பெருவிலை ஆகிய சொல்லாட்சிகளை நோக்கும்பொழுது இக்கருத்து புலப்படும். பெருங்கதையிலும்

'பெரு' என்ற அடைமொழியோடு வருகின்ற சொற்கள் அரசருடன் தொடர்புடைய என்ற பொருளில் வருவதைக் காணலாம். அவ்வகையில் பெருந்திணை என்ற சொல் தமிழகத்தில் அரசு உருவானபின் அவ்வரசின் அங்கமான அரசு நிர்வாகத்தில் அரசுக்கு ஊழியம் செய்யும் அதிகாரிகளைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கல்வெட்டுகளில் காணமுடிகின்றது.

முதன்முதலாக கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டில் பூலாங்குறிச்சி கல்வெட்டில்தான் பெருந்திணை என்ற சொல் காணப்படுகின்றது. அக்கல்வெட்டில் குறிக்கப்படும் 'உலவியப் பெருந்திணை நல்லங்கிழான் இனங்குமான்' 'உலவியப் பெருந்திணைப் . . . அறுகிழான் கீரங்காரி', 'உலவியப் பெருந்திணை அம்பருகிழான் குமாரம் போந்தை' ஆகியோர் மன்னனது ஆணையை நேரில் கேட்டுவந்து நடைமுறைப்படுத்திய அதிகாரிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல் என்பதை அறியமுடிகிறது. அத்துடன் பெருந்திணை என்பது அரசு நிர்வாகத்தின் உயர்பதவி என்பதையும், அரசனுக்கு அணுக்கமாக இருந்து அரசனின் ஆணையை ஏற்று நடைமுறைப்படுத்தும் அரசு உயர் அதிகாரிகளே 'பெருந்திணைகள்' என்று அழைக்கப்பட்டனர் என்பதையும் இக்கல்வெட்டின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. பூலாங்குறிச்சி கல்வெட்டில் காணப்படும் பெருந்திணை என்ற சொல் 'உலவியத்தான்' என்ற மன்னனின் அதிகாரிகளைக் குறிப்பதாக தொல்லியல் அறிஞர் ஒய். சுப்பராயலு குறிப்பிட்டுள்ளார். 'உலவிய பெருந்திணை' என்ற சொல்லுக்கு சஞ்சாரம் செய்யும் அதிகாரிகள் என்று தொல்லியல் அறிஞர் இரா. நாகசாமி பொருள் கொண்டுள்ளார். எவ்வாறாயினும் பெருந்திணை என்ற சொல் அரசு நிர்வாக அதிகாரி என்ற பொருளிலேயே கல்வெட்டுகளில் பயின்று வந்துள்ளதை அத்தொல்லியல் அறிஞர்களின் கருத்துக்கள் உறுதி செய்கின்றன.

பெருந்திணைகள் தங்களின் பெயருடன் தங்கள் பதவியின் பெயரையும், தாங்கள் பிறந்த ஊரின் பெயரையும், தங்கள் ஊர் அமைந்துள்ள நாட்டின் பெயரையும் சேர்த்தழைக்கப்பட்டனர். புதுக்கோட்டை மாவட்டம் கவிநாட்டு கண்மாயில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டு குமிழிக் கல்வெட்டு இதற்கு சான்றாக அமைந்துள்ளது.

"*வல்லநாட்டு கவிர்ப்பால் மூதாண்டி பெருந்திணை வெண்கன் செய்வித்தது*"

என்ற கல்வெட்டில் வல்ல நாட்டிலிருந்த கவிர்பால் என்ற ஊரைச் சேர்ந்த மூதாண்டி என்பவன் பெருந்திணையாகப் பணியாற்றியபொழுது குமிழியைச் செய்தளித்ததாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில் மூதாண்டி என்பவன் பெருந்திணையாக விளங்கியதையும், அப்பெருந்திணை வல்லநாட்டிலுள்ள கவிர்பால் என்ற ஊரைச் சேர்ந்தவன் என்பதையும், மூதாண்டி பெருந்திணை கவிர்பால் என்ற ஊரைச் சேர்ந்தவனாக இருந்தாலும் வல்ல நாட்டு பெருந்திணையாக செயல்பட்டமையும் அக்கல்வெட்டின் மூலம் அறியப்படுகின்றது. வல்லநாட்டு கவிர்ப்பால் மூதாண்டி பெருந்திணை என்பதில் மூதாண்டி என்பவன் தன் பெயருடன் தான் பிறந்த ஊரின் பெயரையும், தன்னுடைய பதவியின் பெயரையும் இணைத்து அழைக்கப்பட்டுள்ளதால் மூதாண்டியின் (மூத்த + ஆண்டி) குடி, பதவி, ஊர், நாடு ஆகியவற்றின் பெருமையையும், சிறப்பையும் உணர்த்துவதாய் அக்கல்வெட்டு அமைந்துள்ளது எனலாம்.

பந்தல்குடி, இருவப்புரம், கவிர்பால் போன்ற ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் திணைகளும், பெருந்திணைகளும் நாட்டு நிர்வாகத்தில் ஆற்றிய பங்களிப்பை விளக்குவதாய் அமைந்துள்ளன. சிற்றூர் நிர்வாகத்திலிருந்த திணைகளும், நாட்டு நிர்வாகத்திலிருந்த பெருந்திணைகளும் அவரவர் ஊர்ப்பெயரையும், மன்னனின் பெயரையும் முன்னொட்டாகக் கொண்டு அழைக்கப்பட்டுள்ளதை பல கல்வெட்டுகளில் காணமுடிகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், மேலப்பழுவூர் அகத்தீசுவரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் இதற்கு சான்றாக அமைகின்றன. குன்ற கூற்றத்து நாட்டார் விறை நாட்டு சோனார்க்கு ஜன்ம பூமி வழங்கியபொழுது கூடிப் பேசி ஆராய்ந்து முடிவெடுத்து அத்தீர்மானத்தை ஓலையில் எழுதி நாட்டுத் திணைகளும், நாட்டுப் பெருந்திணைகளும் தங்களின் பெயருடன் தங்களின் பதவி, ஊர், நாடு, மன்னன் பெயரையும் இணைத்து அத்தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளதைக் காணமுடிகின்றது. கையெழுத்திடும்பொழுது 'கூற்றூருடை இரணமுக நாமப்பெருந்திணை' என்றும், 'கூற்றூருடை மறவகோன் பெருந்திணை' என்றும் 'சுந்தரசோழன் பெருந்திணை' என்றும் அவரவர் ஊரின் பெயரையும், மன்னனின் பெயரையும் அடைமொழியாகக் கொண்ட கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அக்கல்வெட்டுகள்

அனைத்தும் அக்காலத்தில் திணைகளும், பெருந்திணைகளும் நாட்டு நிர்வாகத்தில் ஆற்றிய சிறப்பான பணிகளை உணர்த்துவதாக அமைந்துள்ளன எனலாம்.

பெருந்திணை என்ற சொல் அரசு நிர்வாகத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளதையும், அச்சொல் தமிழகத்தின் அனைத்துப் பகுதியிலும் பொதுப்பயன்பாட்டில் இருந்துள்ளதையும் இலக்கியங்கள் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை பல கல்வெட்டுகளில் பெருந்திணை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. பெருந்திணை என்ற சொல் பயின்று வரும் கல்வெட்டுகள் திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இலக்கியங்களில் பெருங்கதையில் மட்டும்தான் பெருந்திணை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை உ.வே. சாமிநாத ஐயர் தாம் எழுதிய உரையிலும் எடுத்துக்காட்டியுள்ளார். பெருங்கதை என்ற வடமொழிக் காவியத்தை தமிழில் மொழி பெயர்த்து எழுதும்பொழுது தமிழ், பிராகிருதம், வடமொழி ஆகியவற்றிலுள்ள நிர்வாகச் சொற்கள் எவ்வித மாற்றமுமின்றி உள்ளவாறே எடுத்துக் கையாளப்பட்டுள்ளன. அந்நிர்வாகச் சொற்கள் தமிழ் மொழியில் வழக்கிலிருந்ததாக உபாத்தியாயா குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் பெருந்திணை என்ற நிர்வாகச் சொல் பற்றிய குறிப்புகள் அதிகம் காணப்படுவதால் அரசு நிர்வாக அமைப்பில் அச்சொல்லின் பயன்பாடு பரவலாக வழக்கில் இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது.

பிற்காலத்தில் ஆட்சி மாற்றத்தால் ஏற்பட்ட நிர்வாக சிதைவின் காரணமாக அச்சொல்லின் பயன்பாடு படிப்படியாகக் குறையத் தொடங்கியது. எனினும் திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய குறிப்பிட்ட பகுதியில் மட்டும் அச்சொற்களின் பயன்பாடு தொடர்ந்து இருந்துள்ளதை அப்பகுதியில் கிடைத்துள்ள கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகின்றது. அப்பகுதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் நிர்வாக அமைப்பு முறையை முழுமையாகப் பாதிக்கவில்லையென்று தெரிகிறது. ஆட்சி மாற்றத்திற்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்களும் நிர்வாகத்தின் சிறப்புக் கூறுகளை ஏற்று ஆட்சி புரிந்துள்ளனர். சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட

பெருந்திணை என்ற சொல் அப்பகுதிகளில் எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து பயன்பாட்டில் இருந்துள்ளதை நோக்கும்பொழுது அப்பகுதியில் அரசு நிர்வாக அமைப்பும், செயல்பாடுகளும் சிறப்பாக இருந்துள்ளதை அறியலாம்.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையில் குடி, திணை, பெருந்திணை என்ற சொற்கள் ஊர் நிர்வாகத்திலும், நாட்டு நிர்வாகத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல் சமூக மாற்றங்களினால் இச்சொற்களின் பயன்பாடு சிறிது சிறிதாகக் குறைந்து வழக்கொழிந்துவிட்டன. குடி, திணை, பெருந்திணை ஆகிய சொற்கள் சங்க காலத்திற்கு முன்பே தோன்றியபோதும் காலமாற்றத்தால் இச்சொற்களின் பொருள்கள் மாறிமாறி வந்துள்ளன. தொடக்கக் காலத்தில் குடி என்பது இரத்த உறவுகொண்ட தொல்குடி மரபையும், திணை என்பது சிற்றூர் நிர்வாகத்திலும், நாட்டு நிர்வாகத்திலும், அரசு நிர்வாகத்திலும் பங்காற்றிய தொல்குடி மூத்தோனையும், பெருந்திணை என்பது அந்நாட்டு நிர்வாகத்தினை அரசின் பிரதிநிதயாக இருந்து நடைமுறைப்படுத்திய அரசு உயர் அதிகாரிகளையும் குறிப்பதாக இருந்துள்ளன. இத்தகைய பெருந்திணைகள் அரசின் திட்டங்களை செயல்படுத்தும் உயர் அதிகாரிகளாகவும், மன்னனுக்கு அணுக்கமான அதிகாரிகளாகவும் இருந்துள்ளதைக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகின்றது.

இத்தகைய வளர்ச்சிப்போக்கு தமிழ்நாட்டில் ஐவகை நிலங்களிலும் ஒரே சீரான நிலையில் நடைபெறவில்லை. குறிஞ்சி, முல்லை நிலப்பகுதியில் காணப்பட்ட சமூக பொருளாதார வளர்ச்சி மாற்றங்களைவிட வளமை வாய்ந்த மருத நிலப்பகுதியில்தான் சமூக, பொருளாதார வளர்ச்சியும், மாற்றங்களும் சீராகவும், விரைவாகவும் நடைபெற்றுள்ளன. மருத நிலத்தில் ஏற்பட்ட இத்தகைய விரைவான மாற்றங்களுக்கு அந்நிலப்பகுதியில் காணப்பட்ட பொருளாதார வளமையே காரணமாகும். இத்தகைய சமூகப் பொருளாதார வளர்ச்சியையும், மாற்றங்களையும், முரண்பாடுகளையும் தொடர்ச்சியாக விளக்குகின்ற கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகள் தமிழகத்தில் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. எனினும் குறைவாகக் கிடைத்துள்ள சான்றாவணங்களைக் கொண்டு சமூகத்தின் இயக்கத்தை உணர்த்திடும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்**

1. ஏங்கெல்ஸ், பி. -1978 - குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் - முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ

2. மாதையன், பெ. -2004 - சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும் - பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-600 014

3. பூங்குன்றன், ர. - 1999 - பண்டைத் தமிழகத்தில் அரசு உருவாக்கம், முனைவர் பட்ட ஆய்வேடு, கல்வெட்டியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

4. சிவத்தம்பி, கார்த்திகேசு, - 1971 - திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்படைகள் ஆராய்ச்சிக் காலாண்டிதழ்-8

5. தொல்காப்பியம் பொருளதிகாரம், - 1982 - திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

6. இராசேந்திரன், கரு. - புதுக்கோட்டை மாவட்டக் குமிழிக் கல்வெட்டுகள், ஆவணம் இதழ்-3, பக். 12-16

7. கோபாலன், தே. - இருவப்புரம் பெரும்படைச் சாத்தன் கோயில் கல்வெட்டுகள் - ஆவணம் இதழ்-3, பக். 20-21

8. வேதாசலம், வெ. - நாலூர் அவிச்சேரிப் பள்ளி - வரலாற்றுக் கலம்பகம், பக். 21-29

9. தியாகராசன், இல. - பழுவூர் பழுவேட்டரையர் கல்வெட்டு ஆவணம் இதழ் - 3, பக். 8-10

10. சந்திரசேகரன், கு. - பிற்கால சோழர்கள் உற்பத்தி உறவில் சில நெருக்கடிகள்-இராசபாளையம்

11. பூங்குன்றன், ர. - தொல்குடிகள் - எம்.பில்., ஆய்வேடு, சென்னை

12. பெருங்கதை - கணக்கரும் திணைகளு மமைக்குமுறை பிழையாது - வந்தவ காண்டம் - உதயணன் செங்கோல் சிறப்பு பக். 694
கணக்கரும் திணைகளும், காவிதி கணமும் அணிதரு மூதார்
ஆவண மாக்களும் - பக். 849
அருந்திணை யாயத் தவ்வயின் வழாஅத் திருத்திய திண்தோள்
பெருந்திணை மகளிரும் பக். 164

13. குறுந்தொகை - பாடல் 224

14. மலைபடுகடாம் - பாடல் எண்: 401 (தொல்திணை மூதார்)

15. தொல்காப்பியம் - சொல்லதிகாரம், (உயர்திணை, யஃறிணை யாகிய வகுப்புகள், ஆயிருதிணையி னிசைக்கு மென சொல்லே)
16. The Poolangurichi Inscriptions - Prof. Y. Subrayalu, Tamil University, Tanjore
17. Drama in Ancient Tamil Society - K. Sivathambi
18. Tamil Heroic Poetry - K. Kailasapathy
19. The Poolangurichi Inscriptions - A Relook - Natana. Kasinathan
20. Tamil Lexicon - Vol. III Page 18, 74
21. Tamil Lexicon - Vol. III Page 2875-2876
22. SII. Vol. II, No. 412 (புரவு வரித்திணைக்களத்து வரிப்பொத்த நாயகன்)
23. Inscriptions of the Pudukottai State
24. Concordence of Chola Proper Names - Y. Subrayalu & Karoshima
25. புல்லூர் செப்பேடுகள் - பல்லவர் செப்பேடுகள் முப்பது - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
26. ARE. No. 359 of 1903

# சிவபுரம் ராஜராஜஈசுவரமுடைய மகாதேவர் கோயில்

2

**கி.ஸ்ரீதரன்**

தொல்லியல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு)

சென்னை- பூந்தமல்லி, செம்பரம்பாக்கம் வழியாக அரக்கோணம் செல்லும் சாலையில் பேரம்பாக்கத்திலிருந்து 3 கி.மீ தொலைவிலும், 'கூவம்' என்னும் தலத்திலிருந்து 7 கி.மீ தொலைவிலும் சிவபுரம் என்னும் ஊரில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயில் அமைந்துள்ளது. சென்னை காஞ்சிபுரம் சாலையில் சுங்குவார் சத்திரம் என்னும் ஊரிலிருந்தும், இவ்வூருக்கு வரலாம்.

'சிவபுரம்' என்று இன்று அழைக்கப்பட்டாலும் சோழர்காலத்தில் 'உரோகடம்' என்று பெயரிட்டு அழைக்கப்பட்டதை கல்வெட்டுகளின் மூலம் அறிகிறோம்.

இக்கோயில் அதிட்டானம் முதல் சிகரம் வரை முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், முன் மண்டபம் என்ற அமைப்புடன் விளங்குகிறது. விமானம் ஒரு தளமுடையதாகவும், வட்டவடிவமாகவும் அமைந்துள்ளது. கருவறை தேவ கோட்டங்களில் கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை ஆகிய தெய்வத் திருமேனிகள் சிற்பங்கள் வழிபடப்பெறுகின்றன.

**கல்வெட்டுகள்**

இக்கோயிலில் முதலாம் ராஜராஜசோழன், முதலாம் ராஜேந்திர சோழன், முதலாம் ராஜாதிராஜன், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் (மொத்தம் 22 கல்வெட்டுகள்) காணப்படுகின்றன.

இங்கு எழுந்தருளி அருள்புரியும் இறைவன் 'ராஜராஜ ஈசுவரமுடைய மகாதேவர்' எனப்பெயரிட்டு அழைக்கப்படுகிறார். ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு 'உரோகடம்' என்ற நாட்டுப்பிரிவில் அடங்கியதை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**சிவபுரம்**

இவ்வூர் உரோகடம் என்ற பெயருடன் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. முதலாம் ராஜேந்திரசோழன் காலத்திய 8 மற்றும் 13-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டுகளில் சிவபுரம் என்ற பெயர் குறிக்கப்படுகிறது. எனினும் 12-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் 'புரிசை நாட்டு சிவபுரத்து ராஜராஜ ஈசுவரமுடையார்' எனக் குறிக்கப்படுவதால் இவ்வூர் சிவபுரம் எனத் தொடர்ந்து அழைக்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

**கோயிலின் காலம்**

இக்கோயிலில் காணப்படும் தொன்மையானக் கல்வெட்டு முதலாம் ராஜராஜசோழனின் 24-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1009) கல்வெட்டாகும். இக்கோயிலுக்கு இறையிலி தேவதானமாக முன்னர் கொடையளிக்கப்பட்ட நிலம் நீக்கி, மற்றோர் நிலத்தை இறையிலி தேவதானமாக விற்றுக் கொடுத்த செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது. "உரோடகத்து ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர் வைகானசன் கேசவன் நாராயணன் எழுத்து" என கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. தொன்மையான கல்வெட்டாக விளங்குவதால் சிவபுரம் கோயில் முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்டிருக்கவேண்டும் எனக் கருத முடிகிறது.

**முதலாம் ராஜேந்திரன்**

இக்கோயிலில் முதலாம் ராஜேந்திரசோழனின் 14 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இம்மன்னனின் 7, 8, 9, 11, 12, 13, 16, 21, 26 ஆட்சி ஆண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுகள், இக்கோயிலில் மிகச்சிறந்த நிலையில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை எடுத்துக் கூறுகின்றன.

சிவபுரத்திற்கு அருகில் 'கூவம்' என்ற பாடல் பெற்ற தலம் உள்ளது. அவ்வூர் 'மதுராந்த நல்லூர்' என்றும் அழைக்கப்பட்டது. கூவமான மதுராந்த நல்லூர் உடன் சேர்ந்த சிற்றரையர் பூதூரான ஸ்ரீ மதுராந்தக சேரியிலுள்ள ஏரிக்கு பாலாற்றிலிருந்து நீர் பாய்கின்ற வாய்க்காலை உரோகடம் ராஜராஜஈசுவரமுடைய மகாதேவர்க்கு இறையிலி தேவதானமாகக் கொடையளித்த செய்தி ராஜேந்திரசோழனின் 7-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1019) கல்வெட்டில் கூறப்படுகிறது.

8-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1020) ராஜேந்திர சோழன் நந்தாவிளக்கு இரண்டு எரிக்க 180 ஆடுகள் தானமளித்திருக்கின்றான். மேலும் இக்கோயிலுக்கு இத்தேவர் தேவதானம் நகரம் சிவபுரத்து சங்கரப்பாடியான் நாரணன் செல்வன்

மணவாட்டி (மனைவி) வாசவி என்பவள் நந்தாவிளக்கு ஒன்று எரிக்க 90 ஆடுகள் அளித்ததாக கூறுகிறது. உண்ணாழிகை உடையார்களும், சிவபண்டாரிகளும் நிசதம் உழக்கு நெய் கோயிலுக்கே கொண்டு வந்து கொடுத்து விளக்கு எரிப்பதற்காக சம்மதித்தனர் என்பதைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

9-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு (கி.பி. 1021) மிகச்சிறப்பான செய்தியைக் கூறுகிறது. இக்கோயிலில் எழுந்தருளி அருள்புரியும் ராஜராஜ ஈசுவரமுடையார் மகாதேவர்க்கு 1. திருப்பொற்கொள்கை 2. பொற்பூ 3. பொன்னால் ஆன பட்டம் 4. மண்டை மற்றும் பொன்-மற்றும் ஆபரணங்கள் (மாணிக்கம் - வைரம் - பச்சை - சிவப்பு கற்கள் பதித்தது) மாணிக்கத்தாலி, வட்டமணி, செவிமலர், வெண்சாமரை, பொற்பூ, திருமாலை போன்றவை அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டு விரிவாக எடுத்துக் கூறுகிறது. அவற்றின் எடையும் குறிக்கப்பட்டுள்ளது.

மேலும் முதலாம் ராஜேந்திர சோழன் காலத்தில் இக்கோயிலுக்கு 1. ஆடவல்லான்- அபிமான மேருவிடங்கர் மற்றும் 2. நம்பிராட்டியார் (சிவகாமி அம்மன்) 3. ரிஷபவாகன தேவர் 4. நம்பிராட்டியார் ஆகிய திருமேனிகளும் செய்தளிக்கப்பட்டன. இத்திருமேனிகளுக்கு பொன்னால் ஆன அபிஷேகம், திருமாலை, காதில் அணியும் தோடு, பாகுவலையம், திருக்கைக்காறை, திருக்காற்காறை, பாதசாயல் போன்ற அணிகலன்களும் செய்தளிக்கப் பட்டிருக்கின்றன.

11-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1023) இக்கோயில் கன்மிகள் வழியாக நீர்வேளூர் சபையார் பண்டாரத்திலிருந்து 20 கழஞ்சு பொன் பெற்று வட்டியாக 'ராஜகேசரி' என்னும் அளவையால் நெல் பண்டாரத்தில் கொண்டு வந்து கொடுக்க சம்மதித்தனர் என்ற செய்தி காணப்படுகிறது.

இதே போன்று இவ்வூருக்கு அருகில் உள்ள சிவன் கூடல் சபையினர் இக்கோயில் நிர்வாகிகளிடமிருந்து 400 காசுகள் பெற்றுக் கொண்டனர். அதற்கு வட்டியாக 'ராஜகேசரி' என்னும் அளவையால் பதக்கு நெல்லாக 400 காசுக்கு 66 கலம் 2 தூணி நெல்லாக ஒவ்வொரு வருடம் கோயில் திருமுற்றத்தில் அளித்திட சம்மதம் தெரிவித்த செய்தி கூறப்படுகிறது.

12-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1024) சிவபுரத்து ஸ்ரீ ராஜராஜ ஈசுவரமுடைய மகாதேவர் கோயிலில் நந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்கு அமணிவல்லவன் ராஜராஜனான ராஜேந்திரசோழ இருங்கோளர் தேவியார் தேவன் பொன்னாலியார் என்பவள் கொடையளித்த 96 ஆடுகளைப் பெற்றுக் கொண்ட திருவுண்ணாழிகை உடையார்களும் சிவ பண்டாரிகளும் நித்தம் விளக்கு எரிப்பதற்கு தேவையான உழக்கு நெய்யைக் கோயிலுக்கே கொண்டு வந்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது. மற்றொரு கல்வெட்டில் 'மன்றாடி காளிதாசன் அடியார்' என்ற பெயர் காணப்படுகிறது.

13-ஆவது ஆட்சியாண்டில் தேவதானம் நகரம் சிவபுரத்துச் சங்கரபாடியான் சாத்தன் மாகண்டனான சுந்தர மாயிலெட்டி வைத்த இரு நந்தாவிளக்குகள் எரிப்பதற்கு கொடையளித்த 180 ஆடுகளை திருஉண்ணாழிகை உடையவர்களும், தேவகன்மிகளும் பெற்றுக்கொண்டனர். நாள்தோறும் நெய் அளக்கவும் சம்மதித்தனர். மேலும் இதே 13-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1025) இக்கோயில் வழிபாட்டில் இருந்த சிவபுரச்செல்வர் என்னும் திரிபுரவிஜயர் (திரிபுராந்தக மூர்த்தி) மற்றும் நம்பிராட்டியார் திருமேனிகளுக்கு ஒவ்வொரு சந்தி வழிபாட்டின் போதும் திருவமிர்து, கறியமுது, நெய், தயிர், அடைக்காய் அமுதுகளும், இறைவனுக்கு சாத்தியருள திருப்பரிசட்டத்துக்கும் (ஆடை) நிலம் தானம் அளிக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது.

மேலும் இதே ஆட்சியாண்டில் கோயிலில் இரண்டு விளக்குகள் எரிக்க வைத்த 180 ஆடுகளைத் தேவகன்மிகள் பெற்றுக்கொண்டு நெய் அளக்க சம்மதித்தனர். இதனை அளித்தவர் தேவதானம் நகரம் சிவபுரத்து மாநகரத்தைச் சார்ந்த பிராமணன் வலியடக்கி தோளனான ஆயிரபட்டன் என்பவராவர். அவர் பெயரைக் குறிப்பிடும் பொழுது 'நகரக் கணக்கு' எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்நகரத்தின் கணக்கு எழுதும் காணியை (உரிமையை) விலைக்கு வாங்கி எழுதுவதற்கு கோயிலில் விளக்கு எரிக்க 180 ஆடுகள் கொடை அளிக்கப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது.

16-ஆவது ஆட்சியாண்டில் இக்கோயில் பண்டாரத்திலிருந்து சிங்களாந்தகச் சதுர்வேதி மங்கலத்து மகா சபையினர் 100 கழஞ்சு பொன்னைப் பெற்றுக்கொண்டு அதற்கு வட்டியாக ஆண்டுக்கு 166 கலம் 2 தூணி நெல்

கோயிலில் அளந்து கொடுப்பதாக சம்மதித்தனர். இதே போன்று கோட்டூராகிய சோழச்சதுர்வேதி மங்கலத்து சபையினர் 40 கழஞ்சு பொன் பெற்றுக் கொண்டு 66 கலம், 2 தூணி நெல் கோயில் பண்டாரத்தில் வந்து அளித்திட சம்மதித்துள்ளனர்.

21-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1033) சோமன் குமாரனை மதுராந்தகமாராயர் என்பவர் பாசாலி நாட்டு பாசாலி வீரன் உத்தமசோழன் கங்கை கொண்டார் என்பவரிடம் முப்பது காசுகளை அளித்து, காசு ஒன்றுக்கு ஓராண்டுக்கு வட்டி ராஜகேசரி என்னும் மரக்காலால் பதக்கு வீதம், முப்பது காசுகளுக்கு வட்டியாக வந்த ஐங்கல நெல்லை, சிவபுரத்து கோயிலில் ஐப்பசி மாதத்தில் நடைபெறும் திருவேட்டைத் திருவிழாவில் இறைவனுக்கு பெருந்திருவமுது படைக்க கொடையளிக்கப்பட்டது. அக்கொடை மூலம் அரிசி ஒரு கலம், நெய் இரு நாழி, எண்ணை இரு நாழி, தயிர் பதக்கு, பலவிதமாக கறியமுது நான்கு, மிளகு உழக்கு, கடுகு உழக்கு, சர்க்கரை நாழி, விறகிடுவானுக்கு - குசவனுக்கு (பானை செய்து தருவதற்கு) ஆகியவற்றுக்கு மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து கலம் நெல் சரியானது (செலவானது) எனக் கல்வெட்டு துல்லியமாகக் குறிப்பிடுகிறது.

மேலும் இதே ஆட்சியாண்டில் (கி.பி. 1033) சோழ மண்டலத்து உய்யக் கொண்டார் வளநாட்டு திருவழுந்தூர் நாட்டு கடவூர் அரிந்தம நல்லூருடையான் நீலன் வெண்காடன் என்பவன் அளித்த கொடையைக் கொண்டு (துளைநிறை காசு கல்லால் 25 கழஞ்சு பொன்) சுவாமி போகமாக நிலம் அளிக்கப்பட்டது. இதனைக் கொண்டு வேதம் ஓதும் அந்தணர்களுக்கு அமுது அளிக்கவும், இதர செலவுகளுக்காகவும் 'அருண்மொழி தேவன்' என்ற அளவையால் நெல் அளிக்கப்பட்டது. இதனை சிலாலேகை (கல்வெட்டு) செய்வித்தோம் சிவபுரம் ஸ்ரீராஜராஜ ஈசுவரமுடையார் ஸ்ரீகார்யம், சிவபண்டாரிகள், தேவகன்மிகள் எனக் கல்வெட்டு விரிவாகக் கூறுகிறது.

26-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1038) கன்றூர் நாட்டு சோழ விச்சாதிர சதுர்வேதி மங்கலத்து சபையார் இக்கோயிலுக்கு நிலம் ஒன்றினை இறையிலி தேவதானமாக 10 ராஜராஜன் காசு பெற்றுக் கொண்டு 'நில விலையாவணம்' செய்து கொடுத்துள்ளனர். இந்நிலத்தினை உழுது பயிர் செய்து வரும் வருவாயினைக் கொண்டு இறைவனுக்கு அமுது படைக்கும் பொழுது சிவயோகி ஒருவருக்கு உணவளிக்க தானம் அளித்த செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது.

**முதலாம் ராஜாதிராஜன்**

(கி.பி. 1018-1054) இம்மன்னனின் 27-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1045) கல்வெட்டில் இக்கோயிலில் ஆதித்தவாரம் (ஞாயிறு) தோறும் "ஆதித்தவாரப் பெரும்பலி" என்ற சிறப்பு வழிபாடு நடைபெற தானம் அளித்த செய்தி விரிவாகக் கூறப்படுகிறது. தானம் அளிக்கப்பட்ட நிலத்திலிருந்து வரும் நெல்லைக் கொண்டு திருவாராதனை செய்வார், திருஉண்ணாழிகை உடையார், மாணிகள் அறுவர், பதியார் 24 பேர், பஞ்சாசாரியார், வீணைவாசிப்பார், உடுக்கை வாசிப்பான், திருப்பதியம் பாடுவான், திருவாய்க்கேழ்வி உடையான், பாடவியம் உள்ளிட்ட உவச்சர் பதின்மர், கவரிபிணாக்கள் (சாமரம் வீசுபவர் 12 பேர்), திருப்பள்ளித் தொங்கலிடுவர் (குடை பிடிப்பவர்) நால்வர், கணக்கன், பண்டாரி, திருமெய்க்காப்பாளர் நால்வர், திருப்பள்ளித்தாமம் பறித்துத் (மாலை) தொடுப்பானுக்கும், விளக்கு பிடிப்பார் நால்வர், கொடி பிடிப்பார் நால்வர் ஆகியோருக்கு அளிக்கப்பட்டதாகக் கூறுகிறது. திருக்கோயிலில் பணிபுரிபவர்களைப் பற்றி அறிந்து கொள்ள இக்கல்வெட்டு பெரிதும் உதவுகிறது.

**முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்**

பாண்டிய மன்னனுடைய 15-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1267) கல்வெட்டுகள் இரண்டு இக்கோயிலில் காணப்படுகின்றன. இவ்வூர் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு அருகில் உள்ள கூவம் என்ற தடாக சமுத்திர நல்லூரைச் சேர்ந்த வாசுதேவன் காராணை விழுப்பரையன் மகள் ஆறைச்சியார் என்பவள் கோயில் சிவபிராமணர்கள் வசம் ஒன்பது பணம் அளித்த செய்தியும், மேலும் சந்தி விளக்கு எரிக்க மாத்தூர் கிழவன் வடுகன் இராவிழுப்பரையனின் மகள் உமையாண்டை என்பவள் ஒன்பது காசுகளை திருக்கோயில் பிராமணர்கள் வசம் அளித்த செய்தியும் கூறப்படுகின்றன. பாண்டியர் கால கல்வெட்டுகளில் இவ்வூர் "ஊரோடகம்" எனக்குறிக்கப்படுகிறது. சோழர்கால கல்வெட்டுகளில் "உரோடகம்" எனக்குறிப்பிடப்படுவதும் நோக்கத்தக்கது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள சிவபுரம் என்ற ஊரில் உள்ள இராஜராஜ ஈசுவரமுடைய மகாதேவர் கோயில் கல்வெட்டுகள் பல வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றன. சிவபுரம் என்ற இந்த ஊர் சோழர் கால கல்வெட்டுகளில் 'உரோடகம்' எனவும், பாண்டியர் கால கல்வெட்டுகளில் 'ஊரோடகம்' எனவும் குறிப்பிடப்படுகிறது. இக்கோயில் தற்பொழுது சிறிய

கோயிலாகக் காணப்பட்டாலும் "ஆதித்தவாரப் பெரும்பலி" போன்ற சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. ஐப்பசி மாதத்தில் திருவிழாக்கள் நடைபெற்றுள்ளன. இக்கோயிலில் பணிபுரிந்தவர்களைப் பற்றி விரிவாகக் கல்வெட்டு கூறுகிறது. மேலும் முதலாம் ராஜேந்திரன் காலத்தில் ஆடவல்லான் - அபிமான மேருவிடங்கர்-நம்பிராட்டியார், ரிஷப வாகன தேவர் - நம்பிராட்டியார், சிவப்புரச்செல்வர்-திரிபுரவிஜயர்-நம்பிராட்டியார் திருமேனிகள் செய்தளிக்கப்பட்டு அணிகலன்களும் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பெயரும், எடையும் தஞ்சை பிரகதீசுவரர் கோயில் போன்று கல்வெட்டில் துல்லியமாகக் குறிக்கப்படுவது சிறப்பானது. இங்கு கோயில் கொண்டு அருள்புரியும் இறைவனும் இராஜராஜ ஈசுவரமுடைய மகாதேவர் என்றே அழைக்கப்படுகிறார். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இக்கோயிலை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வரலாற்றுச் சின்னமாக அறிவித்து போற்றி பாதுகாத்து வருவது நமக்கு பெருமைதான்!

**அடிக்குறிப்புகள்**


1. ARE. 1959-60 - 280-290
2. ARE. 1961-62 - 226-234
3. தொல்லியல் சுற்றுலா- தொல்லியல் துறை வெளியீடு 2010. பக்கம்: 17
4. தமிழகத் தொன்மைச்சின்னங்கள் - பாதுகாப்பு அறிக்கை 2002-2005 பக்கம்: 59, 66.
5. காஞ்சிபுரம் மாவட்டத் தொல்லியல் கையேடு - இரா. சிவானந்தம் தொல்லியல் துறை வெளியீடு -2008 பக்கம்: 184.
6. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் - தொகுதி - IV -பொது பதிப்பாசிரியர் முனைவர் சீ. வசந்தி, பதிப்பாசிரியர் இரா. சிவானந்தம் -2013. பக்கங்கள் : 1 முதல் 48 வரை (தொல்லியல் துறை வெளியீடு)

# 3 ஆவுடையார் கோயில் பாடல் கல்வெட்டுகள்

**சொ. சந்திரவாணன்**

பதிவு அலுவலர் (ஓய்வு)

**கோ. முத்துசாமி**

பதிவு அலுவலர், திருச்சி.

**ஊர் அமைவிடம்**

ஆவுடையார் கோயில் என்னும் இவ்வூர், புதுக்கோட்டை மாவட்டம் திருப்பெருந்துறை வட்டத்தில் அமைந்துள்ளது. முன்னாளில் இவ்வூர் அறந்தாங்கி வட்டத்தில் இருந்தது. பின்னர், அவ்வறந்தாங்கி வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒன்றிற்கு அறந்தாங்கி என்ற பெயரும் மற்றதற்கு திருப்பெருந்துறை என்றும் பெயரிடப்பட்டது.

அறந்தாங்கியிலிருந்து 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வூருக்கு தஞ்சாவூர், பட்டுக்கோட்டையிலிருந்து நேரிடையாகப் பேருந்து வசதி உள்ளது. மதுரையிலிருந்து திருப்பத்தூர், காரைக்குடி, அறந்தாங்கி வழியே வரலாம். சென்னையிலிருந்தும் அரசு பேருந்து வசதி உள்ளது.

**ஊர்ப்பெயர்க்காரணம்**

ஊர்ப்பெயர் தற்போது, ஆவுடையார் கோயில் என்று மக்கள் பேச்சுவழக்கில் அழைக்கப்படுகின்றது. ஆனால் இவ்வூரின் பெயர் *திருப்பெருந்துறை* என்றே அழைக்கப்பட்டதைச் சமய இலக்கியங்கள் கூறுகின்றன. உலக உயிர்கள் வீடுபேறு பெருவதற்குச் சாதனமாகப் பிறவிக்கடலிலிருந்து கரையேறுவதற்குத் துணையாகப் பெருந்துறையாக விளங்கும் தலம் ஆதலின் *பெருந்துறை* எனப் பெயர் பெற்றது என்பர்.

*பெருந்துறை* என்றும் *திருப்பெருந்துறை* என்றும் அழைக்கப்பட்ட இவ்வூரில் உள்ள சிவன் கோயிலே ஆவுடையார் கோயில் எனப்பட்டது. இக்கோயில் பெயரே இன்று ஊருக்கும் பெயராயிற்று. கல்வெட்டுகளில் இவ்வூர், "*மிழலைக் கூற்றத்து நடுவிற்கூற்றம் பிரமதேயம் தனியூர் திருப்பெருந்துறையான பவுத்திரமாணிக்கச் சதுர்வேதி மங்கலம்*" என்றழைக்கப்படுகிறது.

**கோயில் அமைப்பு**

பெரும்பாலும் சிவன் கோயில்கள் கிழக்கு நோக்கியோ அல்லது மேற்கு நோக்கியோ அமைந்திருக்கும். ஆனால், இங்குள்ள சிவன் கோயில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. சிவன் கோயில் இறைவன் பெரும்பாலும் லிங்க வடிவில் அருரூபமாகக் காணப்படுவதுண்டு. ஆனால் இங்கு குருமூர்த்தம் மேவிய குருபரனான ஆத்மநாதர் அருரூபமாகக் காணப்படுகின்றார். லிங்க வடிவில்லாமல் ஆவுடைப்பாகம் மட்டும் காணப்படுவதால் இக்கோயிலுக்கு *ஆவுடையார் கோயில்* என்று பெயர் ஆயிற்று.

கோயில் கொண்டுள்ள இவ்விறைவன் ஆத்மநாதர், ஆத்மநாதசுவாமி என்று அழைக்கப்படுகின்றார். கல்வெட்டுகளில் இவ்விறைவன் *திருப்பெருந்துறை நாயனார், ஆளுடைய தம்பிரான்* என்றும் *ஆளுடையஸ்வாமி* என்றும் *தனியூர் திருப்பெருந்துறை ஆளுடைய பரமஸ்வாமி* என்றும், *தனியூர் திருப்பெருந்துறையான பவித்தமாணிக்கச் சதுர்வேதி மங்கலத்து நாயனார் ஆளுடைய பரமசுவாமிகள்* என்றும் அழைக்கப்படுகின்றார்.

ஆவுடையார் கோயில் ஊரின் நடுவே மிகப்பெருங்கோயிலாகக் காணப்படுகின்றது. கோயிலைச் சுற்றிலும் தேரோடும் வீதிகளும் மிக அகலமாகக் காணப்படுகின்றன. இக்கோயிலுக்கென்று இரண்டு பெரிய தேர்கள் கோயிலின் முன்பாக நிறுத்தப்பட்டுள்ளன.

சாலையிலிருந்து கோயிலில் நுழையும் முன்புள்ள கருங்கல் மண்டபம் *இரகுநாதபூபாலன் மண்டபம்* எனப்படும். அழகிய கொடுங்கையுடன் பல மன்னர்களின் திருவுருவங்களுடன் கூடிய தூண்கள் காணப்படுகின்றன. இதனை அடுத்து இராஜகோபுரம் காட்சி அளிக்கிறது. இதனடியில் இருபுறமும் கல்வெட்டுகள் உள்ளன.

அடுத்துள்ளது பஞ்சாட்சர மண்டபம் ஆகும். *பஞ்ச* என்பது ஐந்து என்ற எண்ணைக் குறிக்கும். *அட்சரம்* என்பது எழுத்தைக் குறிக்கும். ஐந்தெழுத்தாவது *நமசிவாய* என்பதாகும். இம்மண்டபத்தில் ஓவியங்களும் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. சிற்பத்தூண்களும் அழகு செய்யும், இம்மண்டபத்தில் சில பாடல் கல்வெட்டுகள் உள்ளன. இம்மண்டபத்திற்கு கனகசபை என்ற பெயரும் உண்டு.

இதனை அடுத்தமைவது சிவபெருமாளும் உமையம்மையும் நடனம் புரிகின்ற *நிருத்த மண்டபம்* ஆகும். இது *நடனசபை, நர்த்தனசபை* என்ற பெயர்களிலும் அழைக்கப்படுவதுண்டு. இம்மண்டபத்தின் தெற்கில் உள்ள அலங்கார மண்டபத்திலும் சில கல்வெட்டுகள் உள்ளன.

இவற்றை அடுத்தமைவது *சுந்தரபாண்டியன் மண்டபம்* ஆகும். இம்மண்டபம் சுந்தரபாண்டியன் என்ற மன்னனால் புதுப்பிக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது. ஆனால் இம்மண்டபத்தின் பழம்பெயர் *தேவசபை* என்பதாகும். இம்மண்டபத்தின் உள்ளேயும், வெளியேயும் பல கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் சில பாடல் கல்வெட்டுகள் ஆகும்.

இதற்கு அடுத்து முதல் திருச்சுற்றில் *தியாகராஜர் மண்டபம்* உள்ளது. இங்கும் சில கல்வெட்டுகளும், அரிய சிற்பங்களும் உள்ளன. இம்மண்டபத்துக் கொடுங்கை பேரழகு வாய்ந்தது. ஐந்துவகையான கம்பிகள் கோர்த்தது போல் விளங்கும் இக்கொடுங்கை மரத்தால் செய்ததுபோல் காணப்படுகிறது.

முதல் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் தல விருட்சமான *குருந்த மரமும்* சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு உபதேசக் காட்சியும் சுதைவடிவில் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றின் உட்சுவரிலும், வெளிச்சுவரிலும் பல மன்னர்களின கல்வெட்டுகள் தூண்களில் காணப்படுகின்றன.

**பஞ்சாட்சர மண்டபக் கல்வெட்டுகள்**

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் பெரும்பாலும் இக்கோயிலுக்கும், இறைவர்க்கும் விடப்பட்ட நிலத்தானங்களையும், பிறதானங்களையும் குறிப்பிடுகின்றன. ஆனால் முற்சொன்ன பஞ்சாட்சர மண்டபத்திலுள்ள கல்வெட்டுகள் பெரும்பாலும் பாடல் கல்வெட்டுகளாகக் காணப்படுகின்றன. மேலும் சில சுவையான செய்திகளையும் தருகின்றன.

இக்கல்வெட்டுகள் இம்மண்டபத்தில் ஒரே வரியாகவும், இரண்டுவரிகளாகவும் காணப்படுகின்றன. அவற்றைப் பாடல் வகைக்கேற்ப நான்கு வரியாக எடுத்தெழுதப்பட்டுள்ளது. இப்பாடல் கல்வெட்டுகளில் *விநாயகர், வேலவன், ஆளுடையார், அம்பாள்* மற்றும் *மாணிக்கவாசகர்* போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. இவ்வரிசைப்படியே இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. அவை வருமாறு:

பாடல் 1

இதம் வெகுவாகுங் கனகசபை யிலெழுதுஞ் சித்திர
பதம் வெகுவாகும் புவனஞ் செய்தானிந்தப் பாக்கலெலாந்
திதம் வெகுவாகச் செய்தான் வந்தவிக்கினந்தீர்த்துச் செய்தான்
விதம் வெகுவாகச் செய்தானெங்கள் சொற்கவிநாயகனே

பாடல் 2

கோமளக் கோதையர்களாடிக் கைகாட்டு மடமாதர்
நாரியார் யிழையார் பாடிக் கைகாட்டுங் கனகசபைதன்னிற்
பாக்களெல்லாம் வேடிக்கையாகச் செய்தானெங்கள்
கோபுர வேலவனே

பாடல் 3

தலஞ்சேர் பிலவவருடபங்கூனிதனில் நவத்து
வலஞ்சேர் நற்கனி வார்த்து மூலமதில் அட்டமிப்
பலஞ்சேரு நாளிற் கனகசபை தன்னில் பாக்களெல்லாம்
நலஞ்சேரவே முகித்தானெங்கள் ஆளுடைய நாயகனே

பாடல் 4

எண்காண விசய வருடந்துவக்கி
பண்காண கனகசபை மண்டபந் தன்னில் யிதம்பேர்வே
தண்காண பிலவ வருடபங் கூனிதனில் நவமா மாக்க ளெல்லாங்
கண்காணவே முகித்தாள் யோகநாயகக் காரிகையே

பாடல் 5

திதிக்குஞ் சகாத்தமிங்கொன்றரை யாயிரஞ் செல்லறு நான்கு
திக்கும் பிலவத்திற் பங்கூனி மாதத்திலோடை திறக்கிற ப
திக்கும் கனகசபை மண்டபந் தன்னில் பாக்களெல்லாம் ம
திக்கும்படி முகித்தானெங்கள் மாணிக்கவாசகனே

இப்பாடல் கல்வெட்டுகளில் இம்மண்டபப் பெயர் கனகசபை என்றழைக்கப்பட்ட செய்தி தெரிகின்றது. இம்மண்டபத்திலுள்ள சித்திரங்கள், பாடல் கல்வெட்டுகள் நன்றாக முடிக்க விநாயகரை வேண்டியது தெரிகின்றது. பாக்கள் சிறப்புடன் செய்ததாக வேலவனை (முருகனை) வேண்டியதும் தெரிகின்றது.

மூன்றாம் பாடலில் தமிழ் ஆண்டு *பிலவ* இடம் பெறுகின்றது. பங்குனி மாதம் ஒன்பதாம் தேதியும் மூலநட்சத்திரம் அட்டமி நாள் எனச் சுவைபடப் பஞ்சாங்கக் குறிப்புகளுடன் பாடல் எழுதி முடித்ததை *ஆளுடைய நாயகன்* எனும் இவ்விறைவன் செயலாகக் கூறப்படுகின்றது.

நான்காம் பாடலில் இம்மண்டபத்தில் எழுதும் பணி *விஜயவருடம்* துவங்கி *பிலவ வருடம்* பங்குனி மாதம் புத்தம் புதிதாக மக்கள் காணும்படி செய்தாள் *யோகநாயகி* எனும் இறைவி என்று வரக் காணலாம்.

ஐந்தாம் பாடல் கல்வெட்டில் *மாணிக்கவாசகர்* இம்மண்டபத்தில் பாடல்களை எழுதி முடித்தார், என்று வருவது காணத்தக்கது. சகாப்தம் இங்கு ஒன்றறை ஆயிரஞ்செல்ல அறுநான்கு திக்கும் என வருவதைக் கொண்டு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இப்பாடல்கள் எழுதப்பட்டன என்பது தெரிகின்றது.

எனவே, இப்பாடல் கல்வெட்டுகளின் வாயிலாக, மாணிக்கவாசகர் பெருமான் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஆவுடையார் கோயிலைக் கட்டியதும், அக்காலத்தில் திருவாசகம் கோயில் சுவர்களில் பதிக்கப்பட்ட செய்தியும், பின்னர், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பஞ்சாட்சர மண்டபத்தில் அதன் விபரம் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளமையும் நமக்குப் புலனாகிறது.

# The Migration of Chezhuhai Vellalas - A Study

4

**D. Gopalan**

District Archaeological Officer

Mela Chezhuvanur and Kizha Chezhuvanur are two villages adjacent to one another about 35 Km South-west of Ramanathapuram in Vaalinokkam-Sayalkudi roadway in Mudukulathur taluk Ramanathapuram district. During later Pandya period these two places were known as chezhuvanur, as revealed by the inscriptions found in the Siva temple of Mela Chezhuvanur village. The folk story published in Chezhuhai Thanjakkovai by one Mr. S. Balasubramaniam Pillai in 1920 speaks about this village. The main sources for this article are 'Chezhuhai Thanjakkovai'. 'Chezhuhar Ammanai' and the inscriptions found in the Siva temple of the village.

## The Folk Story

The son of the concubine of Pandya king Vikrama Bahu was Koothan. He was guarding the Chezhuhai. One day he approached the Chezhuhai. Vellalas and revealed his intention of getting married for which he demanded paddy with blessings. Due to famine they could not afford to Koothan tilled a channel from Vaigai to Chezhuhai and made the lands fertile. As a token of gratitude, he demanded a bride from the Vellalas. But they were reluctant to do so. For fear of facing the wrath of Koothan. 700 Vellalas grew pyre before the Puleeswarar temple and perished themselves. All on a sudden a snake appeared before the rest of the 300 Vellalas and prevented them from failing in to the pyre and thereby sacrificed itself by leaping in to the fire. The remaining 300 had left Chezhuhai.*

---

* **Similar reason for migration can be found in the Nagarathar wherein The Chola king asked for bride from their community - Chilapathikaramum Nagarattar Vazhkaiyum - a paper by Mr. Regunathan.**

## The Migration

Before leaving Chezhuhai a girl of their community as an offering to Puleesar. The migrated Vellalas had settled in groups at different places like Allinagaram, Kailasapuram, Thiruppudaimaruthur, Attalanallur, Srivaikundam and Korkai which were situated on the banks of Vaigai. Tamraparani and a few to Kothavari region in the north also.

Those who had settled on the banks of Vaigai were known as Arumpurvazh Vellala. The Arumpur may be identified with the present Arumpanur near Anaimalai in Madurai.

## Nurkudi Vellalar

Those people who had settled at Korkai were known as Nurkudi Vellala. They claim that they had the honour of placing crown on the head of the king at the coronation day of the Pandya kings, traditionally. The $5^{th}$ song of Chezhuhai Thanjakkovai refers them as Agni kula vellalar and also the sect that had crowned the Thennavar i.e., the Pandyas. In the $7^{th}$ song they were referred to as

*Thalatha thennavarku ma mudi chottum*
*Thamizh chezhuhai Velalar*

[meaning: The tamil chezhuhai Velalar are people who were crowning untired Pandyas]

The desendents of this Vellala community are dwellint at Mudivaithanenthal, a place in Tuticorin district, and call themselves as *mudi chootum pillaimar kudumbam* They also bear the title *Pattathu Erungovei Pillai* They have published the literary works Chezhuhai Thanjakkovai, Chezhugai Ammanai and Erungoval Pillaithamizh.

Do the folk stories prevailing among the Nurkudi Vellala have any historical background to support it? To investigate it further, the first evidence in support of the above story comes in the form of the inscriptions of Maravarman Kulasekhara I [1268-1314 A.D.] His meikirti runs as:

*Pazhutharu chirappir chezhuvaik kavalan orangirunthu*

[Meaning: The faultless chezhuvaiyar protector was in his seat...]

Hence we come to know that the city of chezhuhai was a well guarded city of the Pandiya kings.

**Chezhuhai and Chezhuvanur are one and the same**

The chezhuhai Thanjakkovai mentions the name of the village as Chezhuhai and the god Siva is noted as chezhuhai Puli Easer. Robert Sewell in his 'Antiquarian Remains in the Madras Presidency' mentions the remains of a ruined town and dilapidated temple of Puleeswar that are in existence in the Mela chezhuvanur village.

At the bank of Mela chezhuvanur Kammai, there is a Siva temple dedicated to Puleeswarar. At the arthamandapa, on the northern and western walls and at the pillar of the southern entrance three inscriptions are found. Among the three, one inscription belongs to the period of Maravarman Sundara Pandian I [1216-1244 A.D.] engraved on his 5th regnal year i.e., on 1221 A.D. This inscription calls this place as 'sri pandy mandalathu mathurothaya valanattu chezhuvanurana satru bhayangara nallur and the god as Thirupleesvara mudaiya nayanar. The Puleesar mentioned in the Chezhuhai Thanjakkovai and the Thirupuliswaramudaiya Nayanar mentioned in the inscription are one and the same. As Kodumbalur is known as Kodumbai, Thanjavur as Thanjai, Coimbatore as Kovai, so also Chezhuvanur as Chezhuvai and Chezhuhai. Moreover, the 71st song of Chezhuhai Thanjakkovai while referring to the migration of the Vellalas mentions.

*Chezuhaiyar chikker pathiyai vittu*

Here Chikkal is a nearby village to Chezhuvanur. This Chikkal is mentioned as Chikkar in the above mentioned song. So, it further ascertains that Chezhuhai and Chezhuvanur are one and the same.

Another inscription of Konerinmai kondan, records the purchase of Thalikulam land by the Karanaver of Chempil nattu Aappanur and the same was made as gifts to the Thiruppaliswarar and Thiruvanantheeswara-mudaiyar of Kidaramkondapuram [its present name is Melkidaram]

The *Idaikulanadu* mentioned in the inscription is the area adjoining coastal region to the south of Vaalinokkam. to its north is Chembinadu. The Idaikula nattu Aappanur was later on known as *Ezhzur chembil nattu Aappanur*. In the later half of the 13th Cy. A.D. Ezhur Chembinadu was a sub-division of Idaikkula nadu. Ezhur ought to be a region consisting of seven villages.

The Kadaram konda puram mentioned in the inscription adjacent to Mela Chezhuvanur is at present goes by two villages namely Kizh Kidaram and Mel kidaram. The Siva temple mentioned as Thiruvanantheeswaramudaiyar in the inscription is now situated in Melkidaram. During the period of the Cholas this place was known as Kadaram Konda Chola Puram as a mark of victory over Kadaram by the Cholas. But during the later Pandya period its name had dropped Cholas and was called as Kidaramkondapuram.

## Korkai Kavalan

The migration of Chezhuhai Vellalas to Korkai might have happened during the period of Maravarman Kulasekhara I [1278-1314 A.D.] Korkai was one of the principal town of the Pandya rulers. The Heads of this Vellala community might have settled in Mudivaithanenthai, a nearby village to Korkai by the Pandya kings. It might have happened before 1268 A.D.

Late Mr. Sethuraman a renowned historian of the Pandyas mentions that Maravarman Vikrama Pandya II [1250-1276 A.D.] bore the title KORKAI KAVALAN meaning 'the Protector of Korkai'. This Vikrama Pandya II might be the Vikrama Bahu of Chezhuhai Thanjakkovai refers to his crowning in Korkai Moothur as

*Moothurin muppathu moontru nootrandin*

*Mudi tharitha katheru Vikraman*

**Conclusion**

1] The Chezhuhai of Chezhuhai Thanjakkovai and the Chezhuvanur mentioned in the later Pandya inscriptions are one and the same.

2] The Chikkarapathy referred in Thanjakkovai is Chikkal a nearby village of Melachezhuvanur

3] The Kadaramkonda Cholapuram of the chola regine became Kidaramkondapuram during the later Pandya period [by dropping *Chola*], and now it goes by two villages viz., Melkidaram and Kizhkidaram.

4] Arumpur may be identified with Arumpanur of Anamalai near Madurai.

5] The Idaikulanattu Aappanur became Ezhur Chembil nattu Aappanur in the later half of the $13^{th}$ C.A.D.

6] The Vikrama Bahu of Thanjakkovai might have been the Vikrama Pandya II [1250-1276 A.D.] who bore the title Korkai Kavalan.

7] The Chezhuhai Vellalas after the migration to Korkai became Nurkudi Vellalas and gained prominence to such an extent that they did the act of crowning the Pandya kings and was called as 'Mudi Chootum Marabinar'

8] The Thirumalai Naicker Copper plate issued in 1645 A.D. refers to Nurkudi Vellalas as Korkai Kaniyalar.

9] Maravarman Kulasekhara I [1268-1314 A.D.] might have made the Nurkudi Vellalas to settle at Korkai region.

10] The Nurkudi Vellalas had the privilege of crowning the Pandya rulers during the Coronation. And hence the dwelling place of the Nurkudi Vellalas who did the act of crowning, came to be known as Mudivaithanenthal.

11] The migration and settlement of Nurkudi Vellalas might have happened in the later half of the $13^{th}$ C.A.D.

**Bibliography**

1. Chezhuhai Thanjakkovai [Tamil] - Sivakalai S. Balasubramania Pillai - 1920.

2. The History of Narkudi Vellalas - Sivakalai S. Balasubramania Pillai.

3. Journal of Epigraphical Society of India Vol. XXIII of 1997.

4. Antiquarian Remains in Madras Presidency - Robert Sewen

5. ARE-317-320/1927-1928.

6. Informations provided by Mr. R. Poongundran, Curator, Kovai, Mr. S. Ramachandran, Curator, Korkai, Mr. V. Vedachalam, Epigraphist, Madurai.

# 5 வரலாற்றின் அடிப்படை ஆவணம் ஓலைச்சுவடிகள்

நா. கணேசன்
மண்டல உதவி இயக்குநர், மதுரை

மக்களின் வாழ்வியலை அறிந்துகொள்ள உதவும் ஆவணங்களில் கல்வெட்டுகள், அகழாய்வுத் தொல்லியல் சான்றுகள், நாணயங்கள், செப்புப்பட்டயங்கள், ஓலைச்சுவடிகள், வெளிநாட்டார் குறிப்புகள் ஆகியவை முக்கியமானவையாகும். இவற்றுள் ஓலைச்சுவடிகள் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்தும் ஆவணங்களாக விளங்குகின்றன. குழந்தை பிறந்த நாள் குறிப்புகள், மண ஓலைகள், குடும்ப வரவு செலவு கணக்குகள், நில விற்பனைகள், நில அடமானங்கள், நில குத்தகைகள், வட்டிக்கு விற்றல், வாங்குதல் உடன்படிக்கைகள், அரசனின் ஆணைகள், நாட்டு நிர்வாக செயல்பாடுகள், கோயில் நிர்வாக செயல்பாடுகள், கோயில் வரவு செலவு கணக்குகள், நீதிமன்ற வழக்குகள், நீதிமன்றத் தீர்ப்புகள், இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், வானவியல், சோதிடம், நீதிக்கதைகள், மருத்துவம் போன்ற அனைத்தும் ஓலைச்சுவடிகளில்தான் எழுதப்பட்டன. மற்றைய வரலாற்று ஆவணங்களைவிட ஓலைச்சுவடிகள்தான் அனைத்து மக்களின் வாழ்க்கை நிலை, தொழில், பொருளாதாரம், பண்பாடு, கலை, கலாச்சாரம், கல்வி, சமயம் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதாக உள்ளன.

தொடக்கக் காலத்தில் மனிதன் தனது எண்ணங்களை ஓவியங்களாகவும், குறியீடுகளாகவும், மலைகளிலும், பாறைகளிலும் வரைந்து உணர்த்தினான். தனது வாழ்க்கை அனுபவங்களைப் பாடல்கள் வாயிலாகவும் கதைகள் வாயிலாகவும் வெளிப்படுத்தினான். அம்மனிதனின் வாழ்க்கை அனுபவத்தை வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டவர்கள் அவற்றை மனனம் செய்து பாடவும், பிறருக்கு எடுத்துச் சொல்லவும் தலைப்பட்டனர். அவ்வனுபவங்களைத் தங்களின் வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வாழ்ந்தனர். மகாபாரதக் கதை கேட்டு அண்ணன் தம்பி உறவுகளையும், இராமாயணக் கதை கேட்டு கணவன் மனைவி உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டனர். பிற்கால சந்ததியினரும்

அவற்றைக் கடைப்பிடிக்க ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்தனர். மனித சமூகத்தில் இத்தகைய வளர்ச்சி போக்கு மாற்றங்கள் தொடர்ந்து படிப்படியாக நிகழ்ந்த வண்ணம் இருந்தது.

மக்கள் தொடக்கக் காலத்தில் இதழ், தோடு, மடல், ஏடு, பாளை, ஓலை ஆகியவற்றில் எழுதி வைத்தனர். இதனை,

"தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
............................
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்" என்று தொல்காப்பியம் சுட்டுகின்றது. இலை, மரப்பட்டை, களிமண்தகடு போன்றவை விரைவில் அழியக் கூடியவை. மரப்பலகை, மூங்கில் பத்தை போன்றவற்றில் பெரிய நூல்களை எழுதிவைத்து கையாளுவது கடினம். தோல், உலோகத்தகடு, கருங்கல் போன்றவற்றில் எழுதுவது அதிகப்பொருள் செலவு ஏற்படும். அதனால் பண்டைய மக்கள் எழுதுவதற்கு ஓலையைப் பயன்படுத்தியுள்ளனர்.

ஓலை பல நூறாண்டுகள் அழியாத்தன்மைக் கொண்டது. தமிழகத்தில் கிராமங்கள் முதல் அனைத்து இடங்களிலும் மிகுதியாகவும், எளிமையாகவும் கிடைக்கக்கூடியது. அடித்தட்டு மக்களும் அதிகப்பொருள் செலவின்றி எளிதில் பயன்படுத்தக்கூடியது. மிகப்பெரிய அளவுடைய நூல்களையும் ஒரு ஓலைச்சுவடிக்கட்டில் அடக்கக்கூடிய தன்மையுடையது. பல இடங்களுக்கும் எளிதில் எடுத்துச்செல்லக்கூடிய அளவுடையது. பாதுகாப்பு, குறைந்த பொருள் செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஓலைகளிலேயே அனைத்தும் எழுதப்பட்டன.

சுவடு என்பது பாதத்தின் பதிவாகும். சுவடை தாங்கி நிற்பது சுவடியாகும். எழுத்துச் சுவடுகளை தாங்கி நிற்கும் சுவடி ஓலையில் தயாரிக்கப்பட்டதால் "ஓலைச்சுவடி" என்று அழைக்கப்பட்டது. நாட்டுப் பனை, தாளிப்பனை, சீமைப்பனை ஓலைகள் சுவடிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டன. தகுதியான காய்ந்த ஓலைகளைத் தேவையான அளவு நறுக்கி அவற்றை மிதமான வெந்நீரில் வேகவைத்து பிறகு அவற்றை நிழலில் உலர்த்தி பிறகு வழவழப்பாக கூழாங்கற்களுக்குப் பதிலாக சங்குகளையும் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட ஓலைகள்தான் எழுதுவதற்கு ஏற்றதாகும். இதனை "ஏடு பாடம்

செய்தல்" என்பர். இலக்கிய, இலக்கண நூல்களை எழுதுவதற்கு சமஅளவில் நறுக்கி பதப்படுத்தி கட்டுவதற்கு ஏற்றாற்போல் துளையிட்டு ஓலைகள் தயாரிக்கப்பட்டன.

ஆவணங்கள் எழுத பயன்படுத்தும் ஓலைகள் பெரும்பாலும் நறுக்கப்படாமலும், பதப்படுத்தப்படாமலும் பயன்பாட்டில் இருந்துள்ளன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஓலைக்கட்டுகளைச் சுரணை ஏடுகள் என்று அழைப்பதுண்டு. அரசு ஆவணங்களாக இருப்பின் அவற்றில் அரசு முத்திரை இடப்பட்டு ஆவணக்களரிகளில் வைத்துப் பாதுகாத்துள்ளனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முத்திரை, திருவிதாங்கூர் மன்னர்களின் ஆட்சி முத்திரை, பிரெஞ்சு ஆட்சி முத்திரை, நவாப் கால ஆட்சி முத்திரை, ஜமீன்களின் ஆட்சி முத்திரை பதியப்பட்ட ஓலைச்சுவடிகள் இன்றும் அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பதப்படுத்தப்படாத ஓலைகளில் சொத்து விவரங்கள், வரவு செலவு கணக்குகள், வரிவசூல், நிலத்தீர்வைகள், ஊழியர்களின் ஊதிய விவரங்கள், நன்கொடைகள், உடன்படிக்கைகள், கடன் விவரங்கள், நிர்வாக செயல்பாடுகள், அன்றாட நிகழ்வுகள் போன்றவை எழுதப்பட்டுள்ளன. இத்தகைய ஓலைச்சுவடிகள் அரசு அலுவலகங்களிலும், கோயில்களிலும், மடங்களிலும் நிலவுடமையாளர் இல்லங்களிலும், கிராம கணக்கர்களின் இல்லங்களிலும் பயன்பாட்டில் இருந்துள்ளமைக் கண்டறியப்பட்டுள்ளன. இன்றைய வெள்ளைத் தாள்களின் பயன்பாடுகளைப் போன்று அன்றாடப் பயன்பாட்டில் ஓலைகள் பயன்படுத்தப்பட்டன. நீண்டகாலம் பாதுகாக்க வேண்டிய இலக்கியங்கள், இலக்கணங்கள், காப்பியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், மருத்துவக் குறிப்புகள், நீதிப்போதனைகள், வரலாற்றுக் குறிப்புகள், அரசனின் ஆணைகள் போன்றவை மட்டும் பதப்படுத்தப்பட்ட ஓலைகளில் எழுதப்பட்டன.

ஆணி, தந்தம், நாணல், பறவை இறகு, மெல்லிய தூரிகை, விலங்குகளின் எலும்பு, பன்றிமுள், தண்டு போன்றவற்றை மக்கள் எழுதுகருவிகளாகப் பயன்படுத்தினர். யானைத் தந்தத்தை எழுத்தாணியாகப் பயன்படுத்தியதை, "ஏடாக வடமேரு வெற்பாக அம்கூரெழுத்தாணிகள் கோடாக எழுதும் பிரானை" என்று வில்லிபாரதம் துதிப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன. மன்னர்களும், செல்வந்தர்களும் பொன் எழுத்தாணியை ஓலையில்

எழுதுவதற்குப் பயன்படுத்தியுள்ளதை "பைம்பொன் செய் தவிசின் உச்சி இருந்து பொன் ஓலை செம்பொன் ஊசியால் எழுதி" என்ற சீவக சிந்தாமணி வரிகள் உணர்த்துகின்றன. எனினும் இரும்பினால் செய்யப்பட்ட எழுத்தாணியைத்தான் அனைவரும் அதிகம் பயன்படுத்தியுள்ளனர்.

மன்னர்கள் அரசு ஆணைகளையும், செல்வந்தர்கள் வழங்கிய கொடைகள் பற்றிய விவரங்களையும், மிகுந்த பொருள்செலவு செய்து கல்லில் பொறித்து நிலைத்து நிற்கச் செய்தனர் இவையனைத்தும் முதலில் ஓலையில் எழுதப்பட்டன. மூலஓலை மூல ஆவணமாக ஆவணக்களரியில் பாதுகாக்கப் பட்டது. நகல் ஓலையைக் கொண்டு கேயில், மலை, பாறை, குமிழி, நடுகல் போன்றவற்றில் வழக்கு மொழியில் பொறித்து அனைவரும் அறியும் வகையில் பொது இடங்களில் வைத்துப் பாதுகாத்தனர்.

அத்துடன் இத்தகைய கல்வெட்டுப் பொறிப்புகளுக்கு யாதானுமொருவன் தீங்கு செய்தால் "கங்கை கரையிலே காராம் பசுவையும், பெற்ற தாய் தந்தையையும் கொன்ற பாவத்தில் போவார்கள் என்றும் நன்மை செய்தால் நன்மை செய்தோன் பாதத்தை மன்னன் தலைமேல் கொள்வான்" என்றும் கல்லில் பொறித்தனர். மன்னனின் எல்லையற்ற அதிகார எச்சரிக்கை அவற்றை அழிவிலிருந்து பாதுகாத்தது எனலாம். கி.பி. 1198-இல் இரண்டாம் குலோத்துங்கன் தான் வழங்கிய ஆணையின் இறுதியில் ஓம்படைக்கிளவியாக "இத்தன்மத்துக்கு அழிவு செய்வார் திருவாணை மறுத்தார் பட்டது படக்கடவாராகவும்" என்று குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசன் நேர்முகமாக வழங்கிய ஆணைகளை அதிகாரிகள் கேட்டு ஓலையில் எழுதியுள்ளனர். கி.பி. 1164-இல் இரண்டாம் இராசராசனும், கி.பி. 1256-இல் மூன்றாம் இராசராசனும் நேர்முகமாக வழங்கிய ஆணைகளை அதிகாரிகள் கேட்டு ஓலையில் எழுதியதை "திருவாய்க்கேள்வி முன்னாக" என்று அம்மன்னர்களின் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இத்தகைய ஆவணங்கள் மூலஓலை ஆவணங்களாகவே கருதப்பட்டுள்ளன.

மூலஓலைகளில் எழுதியவர்கள் "திருமந்திர ஓலை" என்றும், மூல ஓலையைப் பார்த்து படியெடுத்து ஒப்பிட்டு சரிபார்த்தவர் "திருமந்திர ஓலைநாயகம்" என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். படியெடுக்கப்பட்ட அரசனின் ஓலை ஆணைகளை எடுத்துச் சென்று அதிகாரிகள் நடைமுறைப்படுத்தி

யுள்ளனர். அவ்வோலையில் "இவ்வோலையைப் பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை ஆண்டனுபவித்துக் கொள்ள கடவாராக" என்று குறிப்பிட்டு ஆணைகளைச் செயல்படுத்தி கொடைகள் நிலைத்திருக்கச் செய்தனர்.

சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சி மதகுமலையில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 4-5-ஆம் நூற்றாண்டு கல்வெட்டில், "உலவியப் பெருந்திணை நல்லங்கிழான் இனங்குமரனும், உலவியப் பெருந்திணை அறுகிழான் கீரங்காரியும், உலவியப் பெருந்திணை அம்பருக்கிழான் குமாரம்போந்தையும், கேட்டு வந்து கூறினன். ஓலை எழுதுவான் றாமன் காரிகண்ணனன். இது கடைப்பி ஓலை காற்கண்டெழுதிக் கொடுத்தேன் வேண்ணாட்டன் நரியங்காரி" - என்ற கல்வெட்டில் மன்னனின் ஆணையை இரு பெருந்திணைகள் கேட்டு வந்ததோடு "றாமன் காரிகண்ணனன்" எழுதிய ஓலையைக் கொடுக்க, அவ்வோலையைப் பிடிபாடாகக் கொண்டு "வேண்ணாட்டான் நரியங்காரி" என்பவன் கல்லில் பொறித்துள்ளான். இத்தகைய கல்வெட்டுப் பொறிப்புகள் மூலஓலை, நகல்ஓலைகளைப் பற்றி தெளிவுபடுத்துகின்றன.

மூலஓலையும் படிஓலையும் நிலைத்த ஆவணங்களாகக் கருதப்பட்டுள்ளன. பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட புராணத்தில் இறைவன் கிழவேதியர் வடிவில் சுந்தரரை அடிமையாக ஏற்றுக்கொண்டதை விளக்குமிடத்தில்,

"ஆட்சியில் ஆவணத்தில்
அன்றிமாற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டுவாய் என்முன்னே
மூச்சியிற் கிழித்த ஓலை
படிஓலை மூலஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்
என்றனன் மாயை வல்லான்"

என்று மூலஓலையும், படிஓலையும் மூல ஆவணங்களாக பயன்பட்டுள்ளதைச் சேக்கிழார் உணர்த்துகின்றார்.

கல்விச்சாலைகளில் இலக்கியம், இலக்கணம், இதிகாசம், புராணம், ஜோதிடம், வானவியல், மருத்துவம், நாட்டியம், இசை போன்ற அனைத்தும் கற்பிக்கப்பட்டன. பண்டைய மக்கள் ஓலைச்சுவடிகளை அறிவின் வெளிப்பாடாகப் போற்றியுள்ளனர். அதனால் ஆகமங்களிலும், கலைகளிலும் வல்லாரான

சிவபெருமானைத் தட்சிணாமூர்த்தியாக படைத்து இடது கையில் ஓலைச் சுவடியைக் கொடுத்தும், கல்விக் கலையின் வெளிப்பாடான சரஸ்வதியின் கரத்தில் ஓலைச்சுவடியை வைத்தும் வழிபட்டுள்ளனர். அவ்வாறு மேம்பட்ட கல்வியைக் கற்ற சான்றோரின் பெருமையை உணர்த்தும் நோக்கில் திருவாசகத்தை தந்தருளிய மாணிக்கவாசகரின் கையில் ஓலைச்சுவடியைக் காட்டி செப்புத் திருமேனியாக வடித்தெடுத்து வழிபட்டுள்ளனர்.

அறிவின் வெளிப்பாடாக விளங்கிய ஓலைச்சுவடிகளில்தான் இலக்கியங்களும் இலக்கணங்களும் படைக்கப்பட்டுள்ளன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தேவாரப் பதிகங்கள் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் தில்லையில் இருந்ததைக் கண்டறிந்த முதலாம் இராசராசன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். கிடைத்தற்கரிய நூல் கிடைத்த மகிழ்ச்சியில் பண்டாரத்தை திறந்துவிட்டு செல்வங்கள் அனைத்தையும் மக்களே கொள்க என்று ஆனந்த கூத்தாடியுள்ளான்.

"......மன்னன் தானும்
ஆடினான் பாடினான் அகக்கண்யாவும்
சிந்தினான் அமுதமுண்டான் போல நெஞ்சம்
தேறினான் நம்பி திருவாரில் தாழ்ந்தான்
பந்தமது சிவனடியார் கொள்க என்னாப்
பண்டாரம் திறந்து விட்டான் பதிவு கூர்ந்தான்."- என்று திருமுறைகண்ட புராணம் கூறுவதிலிருந்து தேவாரம் எழுதப்பட்ட ஓலையின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளலாம். பிறகு "சரஸ்வதி பண்டாரம்" என்ற கருவூலத்தை ஏற்படுத்தி ஓலைச்சுவடிகளை மன்னர்களும், செல்வந்தர்களும் பாதுகாத்தனர்.

"ஓட்டித்தான் விடுத்த ஓலை உட்பொருள் உரைமின் என்ன" என்ற சீவகசிந்தாமணி அடிகளும் "கொற்றவர் திருவுக்கேற்பக் குறித்துநாள் ஓலை விட்டார்" என்ற தடுத்தாட்கொண்டாரான அடிகளும், "பெருமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன் போக்கி" - என்ற திருஞானசம்பந்தர் புராண அடிகளும் "தோகைமண வோலைகொடு தூதுவ ரடைந்தார்" - என்ற நைடதம் - நளன் தூது அடிகளும், "மாதவி யோலை மலர்க்கையி னீட்ட" - என்ற சிலப்பதிகார அடிகளும், மணஓலைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. இவை பண்டைய காலத்தில் திருமண அழைப்பிதழ் ஓலையில் எழுதப்பட்டதை உணர்த்துகின்றன.

பிறர் மனையில் வீடு கட்டி குடியிருப்பதற்கான உடன்படிக்கை. திருமணச் செலவிற்காகவும், பொன் நகைகள் வாங்குவதற்காகவும் வட்டிக்கு கடன் பெற்ற விவரம், வீட்டுமனை, வேளாண் நிலம் போன்ற உடைமைகளை விற்பனை செய்தவிவரம், வட்டிக்குப் பணம் கடனாகப் பெற்று மனைவிக்கு புடவை வாங்கிக் கொடுத்த விவரம், இறந்த தந்தையின் ஈமச்சடங்கைச் செய்வதற்கு வட்டிக்குப் பணம் பெற்று ஈமச்சடங்கை செய்த விவரம், உழவு மாடு, பசு மாடு மேய்ப்பதற்காக பணம் பெற்ற விவரம், புதுமனை புகுவிழா செலவிற்காக கடன் பெற்ற செய்தி, பொன் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் அடமானம் வைத்த செய்தி, அடமானம் வைத்த பொருள்களை மீட்க முடியாமல் காலம் கடந்துவிட்டதால் அப்பொருள்களை விலைக்கிரயம் செய்து விற்பனைச் செய்த செய்தி ஆகியவை ஓலையில் எழுதப்பட்டுள்ளன.

காட்டுச்சேரியிலிருந்த இராமநாத செட்டியிடத்தில் திருக்களாச்சேரியில் இருந்த முட்டைமுமுங்கி பேத்தி ஈஸ்வர அம்முணி என்பவள் சில காலம் வைப்பாட்டியாயிருந்து பிறகு இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பிரிந்து விடுகின்றனர். அப்பொழுது அப்புவீரப்பன் முன்னிலையில் மனராசியாகி ரூபாய் பதினேழு இழப்பீடாகப் பெற்றுக்கொண்டு இருவருக்கும் உண்டான உறவு துண்டிக்கப்பட்டுள்ளது. இவ்விவரத்தை அப்புவீரப்பன் என்பவன் ஓலையில் எழுதியுள்ளான். இத்தகைய உடன்படிக்கைக்கு துடறாச்சீட்டு என்று ஓலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரோமானிய கிரேக்க நாடுகளில் அடிமை முறை இருந்தது. ஆண்டான் அடிமை என்ற வகையில் சமூக முரண்பாடு கூர்மைப் பெற்று வளர்ச்சி பெற்றன. தமிழகத்தில் சமூகம் தொழில் சார்ந்த குடிகளாகவும் ஒவ்வொரு தொழில் குடியும் தொழிற்சாதீய கட்டமைப்பிற்குள்ளும் இருந்துள்ளன. நிலவுடமையாளர்கள் உயர்ந்த சாதியினராகவும், நிலமற்றவர்கள் கீழ்நிலை சாதியினராகவும் உழைக்கும் மக்களாகவும் இருந்துள்ளனர். தொழிற்சாதீய கட்டமைப்பிற்குள் நிலவிய ஆண்டான், அடிமை என்ற சமூக முரண்பாடு தமிழகத்தில் கூர்மையடையவில்லை. தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் இத்தகைய சமூக முரண்பாட்டு வளர்ச்சியை தடுத்ததென்றே கூறலாம்.

பல்லவர் காலம் முதல் நாயக்கர் ஆட்சிக்காலம் வரை ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது ஆட்சி பொறுப்பேற்று அனைத்து மன்னர்களும் தன்னாட்சி பெற்ற சிற்றூர், பேரூர் ஊர்ச்சபை நிர்வாகத்திலிருந்த நிலவுடைமையாளர்களையும்,

தன்னாட்சிப் பெற்ற கோயில் நிர்வாகத்தையும் சார்ந்தே ஆட்சி செய்துள்ளனர். இதனால் மன்னராட்சிக்கும் அடித்தட்டு மக்களுக்குமிடையே நேரிடை தொடர்பின்றி இருந்துள்ளது. நிலவுடைமையாளராகவும், உயர்ந்த சாதியினராகவும் விளங்கியோர் கட்டுப்பாட்டில் தன்னாட்சி பெற்ற கோயில் நிர்வாகமும், தன்னாட்சிப் பெற்ற ஊர்ச்சபை நிர்வாகமும் இருந்துள்ளதை வரலாறு காட்டுகிறது.

அடித்தட்டு மக்கள் மன்னனின் ஆணைக்கும், ஊர்ச்சபை ஆணைக்கும் கட்டுப்பட்டு வாழ்ந்துள்ளனர். இரு அதிகார மையங்கள் இருந்ததால், சாதீய பொருளாதார ஏற்றத்தாழ்வு முரண்பாடு கூர்மையடையவில்லை. நாட்டை நிர்வகித்த மன்னனும் ஊரை நிர்வகித்த உயர்சாதி நிலவுடைமையாளரும் அதிகார பலம் பொருந்தியவர்களாக விளங்கினர். ஊர்சபையாரான நிலவுடைமை யாளர்கள் தொழிற்சாதி கீழ்நிலை மக்களை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். கட்டுப்பாட்டை எதிர்த்த தொழிற்சாதி கீழ்நிலை மக்களை அடக்குவதற்கு மன்னனின் ஆணையைப் பெற்று அவர்களின் உடைமைகள் பறிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டனர்.

இத்தகைய அடிமைகள் நிலவுடைமையாளர்களின் உடைமைகளில் ஒன்றாக மாற்றப்பட்டனர். உடைமைகளை சந்தையில் கூவி விற்பதைப் போன்று மனித அடிமைகளையும் சந்தைகளில் கூவி விற்பனை செய்துள்ளார். பொருட்களின் தரத்திற்கேற்றாற் போல் விலை நிர்ணயிப்பதைப் போன்று மனித அடிமைகளின் உழைப்பு சக்திக்கேற்ப விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்துள்ளனர். தமிழகத்தில் இத்தகைய ஆண்டான் அடிமை முறை கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை இருந்துள்ளதைக் கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள், ஓலைச்சுவடிகள் மூலம் அறியமுடிகிறது.

முதன்முதலாக கி.பி. 948-இல் நந்திவர்ம மங்கலத்து மத்தியஸ்தன் மூன்று அடிமைப் பெண்களை பரமேஸ்வரர் கோயிலுக்கு வழங்கியதாகக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் அடிமை விற்பனை முறை அதிகமாக இருந்துள்ளதை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கி.பி. 1201-இல் வறுமையின் காரணமாக தன்னையும், தன் மக்கள் இருவரையும் 110 காசுகளுக்கு வெள்ளாளன் ஒருவன் விற்றுக்கொண்டான். கி.பி 1210-இல் வெள்ளாளன் ஒருவன் தன்னையும் தன் மனைவியையும் 110 காசுக்கு விற்றுக்கொண்டுள்ளான். கி.பி. 1219-இல் 5 பெண்களும்,

5 ஆண்களும் அவர்களின் வழிவழி சந்ததியினரும் 1000 காசுகளுக்கு அடிமைகளாயிருக்கின்றனர். கி.பி. 1175-இல் தேவரடியார் 4 பேர் 700 காசுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளனர். இதைப்போன்று மனிதர்கள் அடிமைகளாக விலைபேசி விற்பனை செய்யப்பட்டமை கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை சுமார் 700 ஆண்டு காலம் அடிமைகள் விற்பனை தமிழ்நாட்டில் பரவலாக இருந்துள்ளது. நிலவுடைமையாளர்கள் தங்களின் உடைமைகளுள் ஒன்றாக அடிமைகளைச் சந்தைகளில் "கொள்வார் உளரோ" என்று கூவி அழைத்து அடிமைகளின் திறமைகளுக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்து "கொள்வோம்" என்ற வருவோரிடம் விற்பனை செய்துள்ளனர். விற்பனை செய்யப்பட்ட அடிமைகளின் உடலில் இலட்சினை பொறித்து நிலவிற்பனையைப் போன்று பதிவு செய்துள்ளனர். இதனை "திருவிலச்சினையும் இட்டு சந்திராதித்தவரை இவ்விடையரை நாம் கொள்ள" - என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இத்தகைய அடிமை விற்பனை தொடர்பான ஆவணங்கள் "ஆள்விலை பிரமாண இசைவுத் தீட்டு" என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. "இவ்வோலையையே பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை நெற்குறுவதாக கொண்டு சிலாலேகை செய்து கொடுத்தோம்" - என்று ஓலையில் எழுதி அடிமைகள் விற்பனை செய்யப்பட்டதாக கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இத்தகைய அடிமை விற்பனையை மனுதர்ம சாஸ்த்ரம் "தாசபத்ரம்" என்று குறிப்பிடுகின்றது.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அடிமைகள் விற்பனை பற்றிய ஓலை ஆவணம் மூன்று கண்டறியப்பட்டுள்ளன. அவை அடிமை விற்பனை முறையை விளக்கும் ஒப்பற்ற ஓலை ஆவணங்களாக விளங்குகின்றன. முதல் ஓலையில் பறையர் சமூகத்தைச் சேர்ந்த இரு ஆண்களும், அவர்களின் மனைவியர் இருவரும் ராமச்சந்திர நாயக்கருக்கு அடிமைகளாய் இருந்துள்ளனர். ராமச்சந்திர நாயக்கர் தன் அடிமைகளை சுப்பிரமணிய முதலியாருக்கு மத்தியஸ்தர் முன்னிலையில் விலை நிர்ணயம் செய்து பதினான்கு பொற்காசுகளுக்கு தியாகராசன் என்பவரை சாட்சியாக வைத்து விற்பனை செய்த விவரம் குறிக்கப்பட்டுள்ளது. இவ்விவரத்தை வேங்கடபதி என்பவன் ஓலையில் எழுதியுள்ளான். இவ்வடிமைகளின் கீரலுடன் விற்றவரும், பெற்றவரும், சாட்சியும் ஓலையில் கையொப்பமிட்டுள்ளனர்.


இரண்டாவது ஓலையில் தியாகராச முதலியார் தனது அடிமையான பறையன் சந்தோசி மகன் சாயனை பத்து பொற்காசுகளுக்கு சுப்பிரமணிய

முதலியாருக்கு விற்பனை செய்து அடிமைசாசனம் எழுதிக்கொடுத்துள்ளான். இவ்விவரத்தை ராமபத்திரன் என்பவன் ஓலையில் எழுதியுள்ளான். மூன்றாவது ஓலையில் சுப்பா படையாட்சி என்பவன் அப்பாச்சி முதலியாருக்கு தனது அடிமையான பறையன் ராமனையும், அவன் மனைவி முக்கட்டையையும், அவன் பிள்ளைகளையும் எண்பது பொற்காசுகளுக்கு விற்பனை செய்துள்ளான். அடிமைகளும் அவர்களின் சந்ததியினரும் கல்லும் காவிரியும் உள்ளமட்டும், புல்லும் பூமியும் உள்ளமட்டும், சந்திராதித்தவரை சந்ததி பிரவேசம் அடிமைகளாய் சேவகம் செய்வதற்கு சாட்சிகள் முன்னிலையில் அடிமைசாசனம் எழுதிக்கொடுத்துள்ளதை இவ்வோலை சாசனம் விளக்குகிறது.

இவ்வோலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பறையர் சமூக மக்கள் மட்டுமல்லாது வேளாண் மக்கள், கல்தட்சர்கள், தேவரடியார்கள், இடையர்கள், உவச்சர்கள், நந்தவனக்குடிகள், நெல் குத்தும் பெண்கள், வறுமைவயப்பட்ட அந்தணர்கள் என உடைமையற்ற உழைக்கும் மக்கள் அனைவரும் அடிமைகளாக விற்றுக் கொண்டுள்ளனர். சந்தைகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளனர். கி.பி. 1834-இல் திருவாங்கூரில் அடிமைவிற்பனை சந்தை இருந்துள்ளதை ஜெசூட்டு பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் கன்னட நாட்டில் கி.பி. 1819-இல் 82000 அடிமைகளும், மலபாரில் ஒரு இலட்சம் அடிமைகளும் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். காவிரிப்பூம்பட்டினம், கரூர், உறையூர், கோவலன்பொட்டல், கொடுமணல், அரிக்கமேடு, அழகன்குளம், ஆதிச்சநல்லூர், கொற்கை, மாளிகைமேடு போன்ற இடங்களில் கிடைத்த தொல்லியல் சான்றுகளும், கண்டறியப்பட்ட கல்வெட்டுகளும் அரசனின் ஆணைகள், வெற்றிகள், கொடைகள், ஆட்சிமுறைகள் பற்றியும் அதிகளவில் விவரிக்கின்றன. ஆனால் ஓலைச்சுவடிகள் மட்டுமேஅனைத்து மக்களின் வாழ்க்கை முறை, தொழில், பொருளாதார நிலை, கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடு, பல்வேறு மக்களிடையே நிலவிய உறவுமுறை பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கிய ஆவணங்களாகத் திகழ்கின்றன. ஓலை ஆவணங்கள்தான் அரசன் முதல் அடித்தட்டு மக்கள் வரை அனைவரின் வாழ்க்கை நிகழ்வுகளை வெளிப்படுத்தும் ஒப்பற்ற ஆவணம் என்பதை உறுதியாகக் கூறலாம்.



குடி-திணை-பெருந்திணை
"பூலாங்குறிச்சி கண்மாய்" கி.பி. நான்காம் நூற்றாண்டு



வரலாற்றின் அடிப்படை ஆவணம் ஓலைச்சுவடிகள்